Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 180 | செவ்வாய்க்கிழமை | வைகாசி 10 ஆம் நாள் 25 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## வடக்கில் 63 யாழில் 47

யாழ்ப்பாணம், மே 25

வடக்கு மாகாணத்தில் 594 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் 63 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 47 பேர் யாழ் 15

## யாழில் இரண்டு பேர் கொரோனாவால் சாவு

**மீசாலை நபரின் மகளான அரச அலுவலருக்கும் தொற்று**

சாவகச்சேரி, மே 25

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று உயிரிழந்த இருவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத் 15

### கைமீறியது நிலைமை

# 2 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டது பயணத் தடை

**3 நாள்கள் மட்டும் தளர்வு**

கொழும்பு, மே 25

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயணத் தடை எதிர்வரும் 14 நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என அரசு நேற்று அறிவித்துள்ளது. அதற்கமைய எதிர்வரும் ஜுன் 7ஆம் திகதி வரை நாடு முழுவதும் பயணத் தடை நடைமுறையிலிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## கிணற்றில் வீழ்ந்து சிறுமி உயிரிழப்பு

கொடிகாமம், மே 25

கிணறுக்குள் தவறி வீழ்ந்த சிறுமி ஒருவர், அதிலிருந்து மீட்கப்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு 14

## இளம் குடும்பப் பெண் எரிகாயமடைந்து சாவு

யாழ்ப்பாணம், மே 25

தவறுதலாக எரிகாயங்களுக்கு உள்ளான இளம் குடும்பப்பெண், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரி 14

## மீன்பிடிக்கச் சென்றவர் குளத்தில் மூழ்கிச் சாவு

வவுனியா, மே.25

வவுனியா நெடுங்கேணி அரியாமடு பகுதியிலுள்ள குளத்தில் மீன்பிடிக்கச்சென்ற குடும்பத் தலைவர் 14



## யாழ்.மருத்துவமனையில் திருடி வந்தவர் சிக்கினார்

**7 அலைபேசிகள் மீட்பு**

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சில மாதங்களாக மருத்துவர்கள் மற்றும் தாதிய அலுவ 14

## வடக்குக்கு 4 லட்சம் தடுப்பூசிகள் தேவை

யாழ்ப்பாணம், மே 25

வடக்கு மாகாணத்தில் 4 லட்சம் பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் வழங்கப்பட்டால் அவை இரண்டு வாரங்களுக்குள் வடக்கு மக்களுக்குச் செலுத்தி முடிக்கக் கூடியதாக இருக்கும் என் 15

## அவசர தேவையா? 1965

கொழும்பு, மே 25

பொதுமக்கள் அத்தியாவசிய சேவைகள் குறித்து தெரிவிப்பதற்காக '1965' என்ற சிறப்பு தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1965 சிறப்பு தொலைபேசி எண் இன்று 15

## பி.சி.ஆர். சோதனைக்குரிய இரசாயனங்கள் அனுப்பப்படும்

**சுகாதார சேவைகள் பணிப்பாளர்**

கொழும்பு, மே 25

பி.சி.ஆர். பரிசோதனைக்குரிய இரசாயனப் பொருள்கள் விரைவில் வடக்கு மாகாணத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகா 15

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் செயற்பாட்டாளர் மீது விசாரணை

**கடுமையாகக் கண்டிக்கிறது 'பொபொ'**

யாழ்ப்பாணம், மே 25

சிறிலங்கா அரசு தொடர்ச்சியாக பயங்கரவாத சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதையும் கைதுசெய்வதையும் வன்மையாக கண்டிக் 16

## மருத்துவர்களின் குடும்பத்தினருக்கு தடுப்பூசி ஏற்றலுக்கு பெரும் எதிர்ப்பு

**தாதியர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் போராட்டம்**

யாழ்ப்பாணம், மே 25

சுகாதார முன்களப் பணியாளர்களைப் புறந்தள்ளி மருத்துவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படுவதற்கு எதிர்ப்பு வெளியிடுவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பொதுச் சுகாதாரப் பரி 15

## மணல் கடத்திய 'டிரக்ரர்' மீது துப்பாக்கிச் சூடு

**கொடிகாமம் பாலாவியில் சம்பவம்**

கொடிகாமம், மே, 25

தென்மராட்சி பாலாவி பகுதியில், சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் உழவு இயந்திரம் 16

வாசகர்களே! உதயன் + சஞ்சீவி

ஞாயிறு உதயன் நாளிதழ், சஞ்சீவி வார இதழ் என்பவற்றை

எதிர்வரும் திங்கட்கிழமை (31.05.2021) அன்று முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை 40/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கு எம்.பிக்கள் ஒன்றிணைந்து பி.சி.ஆர். இயந்திரம் கொள்வனவு

## மக்கள் கோரிக்கை



**யாழ்ப்பாணம், மே 25**

**வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில் அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பி.சி.ஆர். இயந்திரத்தைக் கொள்வனவுசெய்து வழங்க முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

வடக்கு மாகாணத்தில் பி.சி.ஆர். சோதனைகளின் அளவை அதிகரிக்கவேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். சமூக மட்டத்தில் தொற்றாளர்களை இனம் காண்பதற்கு சோதனைகளை அதிகரிக்கவேண்டும். ஒரே நாளில் அதிகளவான பி.சி.ஆர். மாதிரிகளைப் பெற்றுக்கொண்டாலும் அதனைச் சோதனைக்கு உட்படுத்துவதற்கு இரண்டு ஆய்வு கூடங்களே வடக்கில் உள்ளன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள இயந்திரம் ஊடாக ஆகக்கூடியது ஆயிரம் மாதிரிகளையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் உள்ள இயந்திரம் ஊடாக ஆகக்கூடியது 300 மாதிரிகளையுமே ஒரே நாளில் சோதனைக்கு உட்படுத்த முடியும்.

வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்துக்கு பி.சி.ஆர். இயந்திரத்தைக் கொள்வனவு செய்து வழங்குமாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை விடுத்தும் இதுவரை அது கிடைக்கப்பெறவில்லை.

பி.சி.ஆர். இயந்திரம் ஒன்றின் ஆகக்கூடிய பெறுமதி 45 லட்சம் ரூபா. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் த.சித்தார்த்தன் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சி.வி.விக்னேஸ்வரனும், ஈ.பி.டி.பி. சார்பில் டக்ளஸ் தேவானந்தாவும் (அமைச்சர்), சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் இ.அங்கஜனும் உள்ளனர். வன்னித் தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வினோநோத ராதலிங்கம் ஆகியோரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் காதர் மஸ்தானும், ஈ.பி.டி.பி. சார்பில் கு.திலிபனும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ரிஷாத் பதியுதீனும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் அவர்களது சம்பளம், அமர்வுகளில் பங்கேற்பதற்கான கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு உள்ளிட்ட இதர கொடுப்பனவுகள் மூலம் ஆகக் குறைந்தது மாதாந்தம் 2 லட்சம் ரூபா வரையில் பெற்றுக்கொள்கின்றனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் 3 லட்சத்து 47 ரூபாவை ஒதுக்கினால் வடக்கு மாகாணத்துக்கு அத்தியாவசிய தேவையாக உள்ள ஒரு பி.சி.ஆர். இயந்திரத்தைக் கொள்வனவு செய்யமுடியும். எமது வாக்குகளால் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள், எங்களின் பாதுகாப்புக்காக இதனைக் கொள்வனவு செய்து வழங்க வேண்டும் என்று வடக்கு மக்கள் அழுத்தமான கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (ஒ.5)

# மன்னாரில் கர்ப்பிணிக்கு தொற்று

மன்னார், மே 25

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் இனம் காணப்பட்டுள்ளார். வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட 41 வயதான கர்ப்பிணிப் பெண்ணே தொற்றுடன் கண்டறியப்பட்டுள்ளார். (ஒ.5)

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்வோம்

## மருத்துவமனை பணியாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே 25

தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல நேரிடும் என்று கொழும்பு தெற்கு மருத்துவமனைப் பணியாளர்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா கட்டுப்பாட்டுக்காக நாடு முழுவதும் பயணத்தடை விதிக்கப்பட் டுள்ளது. மருத்துவமனைப் பணியாளர்களில் 70 சதவீதமானோர் பொதுப் போக்குவரத்துக்களிலேயே பணிக்கு வருபவர்கள். கடந்த ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தபோது பணியாளர்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊடாக இலவச பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அவ்வாறான சேவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. கடந்த ஆண்டு நடத்தப்பட்ட சேவைக்குரிய கொடுப்பனவை சுகாதார அமைச்சு வழங்காமையால் இலவச சேவையை வழங்க முடியாமல் இருக்கிறது என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

தமது போக்குவரத்துப் பிரச்சினை மற்றும், சுகாதார ஊழியர்களுக்கு அரசு வழங்கியுள்ள மாதத்தில் 8 நாள்கள் விடுமுறை என்பவற்றை உரிய வகையில் நடைமுறைப்படுத்தவேண்டும். தவறினால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று கொழும்பு தெற்கு மருத்துவமனைப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ.5)

# வேறு வழியில்லை என்றால் வீடுகளில்தான் கண்காணிப்பு

## சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, மே 25


மருத்துவமனைக்கோ, இடைநிலை சிகிச்சை மையங்களுக்கோ கொரோனாத் தொற்றாளர்களை அனுப்புவதுதான் சுகாதார அதிகாரிகளின் நோக்கம். ஆனால் வேறுவழியில்லை என்றால் மாத்திரம் தொற்றாளர்களை வீடுகளில் வைத்துக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

'தற்போது, கொரோனாத் தொற்றாளர்களை மருத்துவமனை அல்லது சிகிச்சை மையத்துக்கு அனுப்புவதற்கே நடவடிக்கை எடுக்கின்றோம். அத்துடன் மருத்துவமனைகள், இடைநிலை சிகிச்சை மையங்களின் திறனை முடிந்தவரை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன' என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாடு முழுவதும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதால், அவர்கள் வீட்டிலேயே சிகிச்சையளிக்கப்படு வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன. மேலும் மருத்துவமனைகள் மற்றும் இடைநிலை சிகிச்சை மையங்களின் திறன் எதிர்காலத்தில் அதிகரிக்க வேண்டி ஏற்படலாம். இவ்வாறான நிலைமைக்கு சுகாதார அதிகாரிகள் எப்போதும் தயாராக இருக்கவேண்டும் என்பதையும் அவர் குறிப்பிட்டார். கொரோனாத் தொற்றாளர்களை வீடுகளில் வைத்து பராமரிப்பது தொடர்பான சுகாதார வழிகாட்டி எதுவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இதுவரை வெளியிடப்படவில்லை.

'வீடுகளில் வைத்துக் கண்காணிப்பது என்பது இலகுவானது அல்ல. அத்துடன் இது நூறு சதவீதம் வெற்றியானதும் அல்ல. இதனை நடைமுறைப்படுத்த எங்களிடம் சிறந்த பொறிமுறை தேவை' என்று ஹேரத் சுட்டிக்காட்டினார்.

மருத்துவமனைக்கோ இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கோ கொண்டுசெல்லப்படவேண்டியதில்லை என்று பரிந்துரைக்கப்பட்டமையால் சில இடங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் வீடுகளில் வைத்துக் கண்காணிக்கப்படுகின்றார்கள். அங்கு மருத்துவமனைகளில் எவ்வாறு தொற்றாளர்களுக்கு சிகிச்சை அல்லது கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றதோ அதே போன்று சிகிச்சை அல்லது கண்காணிப்பு இங்கேயும் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் ஹேரத் மேலும் தெரிவித்தார். (ஒ.5.இ)



# கரும்பூஞ்சைத் தொற்றுக்கும் கொரோனாவுக்கும் தொடர்பில்லை

## இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெளிவுபடுத்தல்

கொழும்பு, மே 25

கொரோனாத் தொற்றுக்கும் கரும் பூஞ்சைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெளிவுபடுத்தியுள்ள இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கருப்பு பூஞ்சை 2019ஆம் ஆண்டே கண்டறியப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த நோயால் இந்தியாவில் பெருமளவானோர் பாதிக்கப்பட்டும் உள்ளனர். இதனால் கரும் பூஞ்சை தொடர்பில் சமூகமட்டத்தில் பல்வேறு தகவல்கள் உலாவுகின்றன. குறிப்பாக அம்பாறையில் இந்த நோயால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் எனவும் தகவலும் கூறப்படுகின்றது என்று இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பங்கசுகள் பிரிவின் மருத்துவ நிபுணர் பிரிமாலி ஜெயசேகர குறிப்பிட்டார்.


இலங்கையில் 2019ஆம் ஆண்டு 42 பேரும், 2020ஆம் ஆண்டு 24 பேரும், இந்த ஆண்டு இதுவரையில் 24 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கவில்லை. என்று அவர் குறிப்பிட்டார். (ஒ.5.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா தடுப்பூசி வழங்கலில் தேவையற்ற அரசியல் தலையீடுகள்

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் பகிரங்கக் குற்றச்சாட்டு



**கொழும்பு, மே 25**

**கொரோனாத் தடுப்பூசித் திட்டத்தில் தேவையற்ற தலையீடுகள் காரணமாக சுகாதார முன்களப் பணியாளர்களிடையே பிளவுகள் ஏற்பட்டுள்ளன என இலங்கை மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

தடுப்பூசிகள் ஏற்றுவதில் அரசியல் மற்றும் உயர்நிலை அதிகாரிகளின் தலையீடுகள் காணப்படுகின்றன என அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு சக்திவாய்ந்த மருத்துவ தொழிற்சங்கம் தடுப்பூசியைப் பெறுவதற்காக அவர்களின் உறுப்பினர்களின் குடும்பங்களை பதிவு செய்வதற்கான செயன்முறையைத் தொடங்கியுள்ளது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம்' என்று மருத்துவ நிபுணர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக அஸ்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் சுகாதார முன்களப் பணியாளர்களைப் புறக்கணித்து மருத்துவ தொழிற்சங்கத்தின் குடும்ப உறுப்பினர்களுக்கு பெற்றுக் கொடுக்க முயற்சிக்கப்படுகின்றது என்றும் அந்தச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. தடுப்பூசி வழங்கலில் சமனான முறைமையை பின்பற்றுமாறு உரிய அதிகாரிகளை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்கும் வரையில், சுகாதாரத் தரப்பில் உள்ளவர்களில் யதார்த்தபூர்வமாக ஆபத்தான நிலையில் உள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கே தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும்.

அதைவிடுத்து சுகாதாரத் தரப்பில் தகுதி நிலைகளின் அடிப்படையில் தடுப்பூசி ஏற்றப்படக்கூடாது என்று மருத்துவ நிபுணர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தடுப்பூசி ஏற்றலில் சமமான அணுகுமுறை பின்பற்றப்படாவிட்டால், பலமான தொழிற்சங்கங்கள் ஒவ்வொன்றும் தத்தமது குடும்ப உறுப்பினர்களுக்கு தடுப்பூசி ஏற்றுமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடும்.

இறுதியாக, இந்த முக்கியமான கட்டத்தில் முன்கள சுகாதாரப் பணியாளர்களிடையே ஏற்படக்கூடிய சீர்குலைவைத் தடுப்பதற்கு யதார்த்தபூர்வமான தடுப்பூசி கொள்கை என்பது காலத்தின் தேவை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம், என்று இலங்கை மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ.5,இ)

# புத்தாண்டு கொத்தணி: இதுவரை பலி 558

கொழும்பு, மே 25

நாட்டில் புத்தாண்டு கொரோனாக் கொத்தணியால் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி முதல் நேற்று வரை 558 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கோவிட் 19 தடுப்பு செயற்பாட்டு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 324 ஆண்களும், 234 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றில் முதலாவது அலையில் 13 பேர் மட்டுமே உயிரிழந்தனர். எனினும், 2 ஆம் மற்றும் 3 ஆம் அலைகளிலேயே அதிகளவான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

அதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின், இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று மருத்துவ சங்கங்களும், வெளிநாட்டு ஆய்வு அமைப்புகளும் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4,44)



# பொலிஸ் பயிற்சியாளர்கள் 37 பேருக்குக் கொரோனா

கொழும்பு, மே 25

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சியாளர்கள் 37 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கல்லூரியின் பயிற்சியாளர்கள் 6 பேருக்கு தலைவலி ஏற்பட்டதையடுத்து, அவர்கள் சிகிச்சைக்காக நாகொட மருத்துவமனைக்குச் சென்றிருந்தனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 6 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து 6 பேருடன் தொடர்பிலிருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 37 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (எ-4)

# தொற்றாளர்களுக்கான தனிமைப்படுத்தல்; செல்வாக்குச் செலுத்தும் அதிகாரிகள்!!!

## யாழ்ப்பாணத்தில் இந்த நிலைமை

யாழ்ப்பாணம், மே 25

கொரோனாத் தொற்றாளராக எதுவித அறிகுறியும் இல்லாத ஒருவரை மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர் சுகாதார அதிகாரிகள். மேற்படி தொற்றாளர் மருத்துவர் ஒருவரின் சகோதரர் என்பதால் இந்தக் 'கவனிப்பு' என்று சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூக மட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் இனம் காணப்பட்டு வருகின்றனர். அவர்களில் தொற்று அறிகுறி இல்லாதவர்கள் இடைநிலைச் சிகிச்சை மையங்களுக்கு (வட்டுக்கோட்டை, கோப்பாய்) கொண்டு செல்லப்படுகின்றனர். அறிகுறிகள் உடையவர்கள் அல்லது சிக்கலான நோய் நிலைமை உள்ளவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

ஆனால் இவை அனைத்தும் சாதாரண மக்களுக்கான நடைமுறை. செல்வாக்கு உள்ளவர்கள் என்றால் அவர்களுக்கு 'விசேட கவனிப்பு' வழங்கப்படுகின்றது என்று சுகாதாரத்துறை யிலுள்ள அதிகாரிகளே சுட்டிக்காட்டு கின்றனர்.

சில நாள்களுக்கு முன்னர் ஆசிரியர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு எந்தவொரு அறிகுறியோ, சிக்கலான நோய் நிலைமையோ இல்லை. இதனையடுத்து அவரை இடைநிலைச் சிகிச்சை நிலையத்துக்குச் செல்வதற்கு தயாராகுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரியிடமிருந்து பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்புச் சென்றுள்ளது. மேற்படி நபருக்கு அறிகுறிகள் இருக்கிறது எனவும் அவரை மருத்துவமனைக்கு ஏற்றுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார். இதனையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மீண்டும் தொற்றாளரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். அவரிடம் தொற்று அறிகுறி உள்ளதா என்று வினவியபோது அதற்கு இல்லை என்று பதிலளித்துள்ளார். சிறிது நேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆதார மருத்துவமனை ஒன்றின் அம்புலன்ஸ் தொற்றாளரின் வீட்டுக்கு வந்துள்ளது. அவரை ஏற்றிக்கொண்டு ஆதார மருத்துவமனைக்குச் சென்றுள்ளது.

> **செல்வாக்கு உள்ளவர்கள் என்றால் அவர்களுக்கு 'விசேட கவனிப்பு' வழங்கப்படுகின்றது என்று சுகாதாரத்துறையிலுள்ள அதிகாரிகளே சுட்டிக்காட்டுகின்றனர்.**

மருத்துவர் ஒருவரின் சகோதரர் என்பதால் இந்த 'விசேட கவனிப்பு' என்று தெரியவருகின்றது. (ஓ.5)

# மொத்த விற்பனைச் சந்தையில் கொரோனா தொற்றும் அபாயம்!

## இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்தக் கோரிக்கை

வவுனியா, மே 25

வவுனியா மொத்த வியாபாரச் சந்தையில், கொரோனாத் தொற்று பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதால், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையினரைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கையில்,

சந்தைகளின் மூலமாகவே தொற்று அதிகமாகப் பரவி வருகின்றது. வவுனியா மொத்த வியாபாரச் சந்தை சிறிய இடமாக இருப்பதுடன், அதிகமான சன நடமாட்டம் உள்ளபகுதியாகக் காணப்படுகின்றது. குறித்த பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தாலும், அவர்களின் அறிவுரைகளைப் பொதுமக்கள் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

எனவே குறித்த பகுதிக்கு விசேட அதிரடிப்படையினர் அல்லது இராணுவத்தினரைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும். அத்துடன் இலங்கை வங்கியின் வவுனியா நகரக்கிளையில் அதிகமான மக்கள் ஒரே நேரத்தில் ஒன்றுகூடுகின்றனர். கடை வீதியில் வங்கி அமைந்திருப்பதால் வியாபாரிகள் முதல் பொது மக்களும் அந்த வங்கிக்கு அதிகளவில் செல்கின்றனர்.

எனவே இலங்கை வங்கிக்கு முன்பாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நிரந்தரமாக நியமித்து, சுகாதார நடைமுறைகளை மீறுபவர்களைக் கணகாணிக்க வேண்டும்- என்றனர். (எ-4,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுப்படுத்தப்பட்ட நபர்களுடன் வற்றாப்பளை விசாகப் பொங்கல்

முல்லைத்தீவு,மே 25

**முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்ட நபர்களுடன் சிறப்பாக நடைபெற்றது.**



கொரோனாத் தொற்றுக் காரணமாக பொலிஸார் மற்றும் படையினரின் கண்காணிப்புக்கு மத்தியில் வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தில் கடந்த ஏழுநாள்களாக அணையா விளக்காக எரிந்த தீர்த்தம் மற்றும் மடைப்பண்டங்கள் என்பவை நேற்று அதிகாலை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு பொங்கல் பொங்கி பூசை வழிபாடுகள் நடைபெற்றன. ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. ஆலயத்துக்கு செல்லும் இரு முதன்மை வீதிகளிலும் படையினர் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் அனுமதிக்கப்பட்ட 51 பேர் மாத்திரம் ஆலயத்துக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதேவேளை ஆலயத்தில் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக பக்தர்கள் புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு வீதியில் வருகைதந்தபோதும் படையினர் அவர்களை திருப்பி அனுப்பினர். ஆலயத்தை அண்மிய பகுதிகளில் உள்ள மக்கள் சிலர் வளாகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் ஆலயத்துக்கு செல்லும் வீதியின் சந்திகளில் தேங்காய் உடைத்து தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றினர். (ஐ-19)






# குடிதண்ணீரைப் பெற நடவடிக்கை எடுங்கள்

## முசுரம்பிட்டி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மே 25

சிரமங்கள் இன்றி குடிதண்ணீரைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முசுரம்பிட்டி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை முசுரம்பிட்டி பகுதியில் 90க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. எனினும், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை எமக்குத் தேவையான குடிதண்ணீரை சிரமமின்றி நாம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இதுவரை காலமும், பொதுக் கிணற்றின் ஊடாகவே தண்ணீரைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. அந்தக் கிணறும் சில காலங்களில் வற்றிவிடுவதால் 500 மீற்றர் தொலைவில் சென்று குடி தண்ணீரைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் தற்போது கொரோனாத் தொற்றுக் காரணமாக அந்த இடங்களுக்குச் சென்று தண்ணீரைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று எமது கிராமத்தில் பொருத்தப்பட்டது.

அதில் ஒரு குடும்பத்துக்குத் தேவையான குடிதண்ணீரைக் கூடப் பெறமுடியாமல் உள்ளது. இதன் காரணமாக சுத்திகரிப்பு இயந்திரத்துக்கான மின்சாரக் கட்டணத்தை யார் கட்டுவது என்ற குழப்பமும் ஏற்பட்டுள்ளது. எனவே எமது மக்கள் எதிர்கொள்ளும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர். (ப-113)

# கந்தசாமி கோவில் உண்டியல் உடைப்பு

கிளிநொச்சி,மே 25

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய உண்டியல் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு அதில் இருந்த ஒரு தொகை பணம் களவாடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நாடு முழுவதும் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உண்டியலை உடைத்து பணத்தை திருடும் காட்சி அங்குள்ள சி.சி.ரி.வி. இல் பதிவாகியுள்ளது என்றும், உண்டியலில் சுமார் 15 ஆயிரம் ரூபா வரை பணம் இருந்தது எனவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-113)

# சிகிச்சை நிலையங்களிலுள்ள மதகுருக்களுக்கு உணவுகள்

வவுனியா,மே 25

கொரோனாத் தொற்றுக் காரணமாக சிகிச்சை நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மதகுருமார்களுக்கு வவுனியா அந்தணர் ஒன்றியத்தால் உணவு வழங்கப்பட்டு வருகிறது. வடக்கு மாகாணத்திலுள்ள கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு வருகைதரும் குருமார்கள் உணவு தேவைப்படின் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் 0741393203, 0776313601 மற்றும் 0773405820 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-110)



# குடும்பத்துடன் வாழ விடுங்கள்

## இலங்கைத் தமிழர்கள் கோரிக்கை

கொழும்பு, மே 25

கொரோனாத் தொற்றுக் காலத்திலாவது, எங்களைக் குடும்பத்தோடு வாழ வழியேற்படுத்துங்கள் என்று சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள், தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் பல்வேறு வழக்குகளுடன் தொடர்புடைய ஈழத் தமிழர்கள் 78 பேர் மற்றும் வங்கதேசம், நைஜீரியா, சூடான், பல்கேரியா நாடுகளைச் சேர்ந்த 104 பேர் தற்போது உள்ளனர்.

சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்கள்.

தற்போது கொரோனாத் தொற்று பரவிவரும் சூழலில், தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எங்கள் மீதான வழக்குகளைச் சட்டப்படி நடத்தி, விடுதலைசெய்ய வேண்டும். எங்களுக்குக் கிடைக்க வேண்டிய சட்ட ரீதியிலான உதவியும் மறுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசு, எங்களை விடுதலைசெய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் 40க்கும் மேற்பட்டவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# 12 ஆண்டுகளின் பின் வெளிவந்தது 'ஷெல்'

முல்லைத்தீவு, மே 25

போரின்போது பயன்படுத்தப்பட்ட ஆர்.பி.ஜி. ஷெல் ஒன்று வெடிக்காத நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டது. கள்ளப்பாடு கடற்கரை மணலின் மேல் அந்தச் ஷெல் கண்டுபிடிக்கப்பட்டது.

போரின்போது வீசப்பட்டு வெடிக்காது மணலில் புதைந்த குறித்த ஷெல், தற்போது வீசும் கடும் காற்றால் எழுந்துள்ள அலைகளால் வெளிவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் கிராம வாசிகள் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார், நீதிமன்றத்தின் அனுமதியுடன் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள். (ப-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சீவன் போவது அப்பாவி மக்களுக்கே!

''கொரோனவைக் கூட ஓரளவு சமாளித்துவிடலாம், ஆனால் இலங்கை அரசாங்கம் போடுகின்ற திடீர் உத்தரவுகளையும், அடிக்கடி மாறுகின்ற நடைமுறைகளையும் தான் புரிந்துகொள்ள முடியாமலும், சமாளிக்க முடியாமலும் இருக்கின்றது " என்று ஆதங்கப்படுகின்றனர் மக்கள். அந்தளவுக்கு மிக சிக்கலான புதிரை விடவும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத உத்தரவுகளை போட்டு கொரோனாச் செயலணி மக்களை குழப்பத்தில் ஆழ்த்தி வருகின்றது.

எப்படி ஊரடங்கு என்பதற்கு 'பயணத்தடை' என்றொரு புதிய சொல்லில் இருந்து தொடங்கிய குழப்பம், இந்தப் பயணதடைக் காலத்தில் யாரெல்லாம் பயணிக்கலாம்?, தேசிய அடையாள அட்டை எண்ணுக்குரிய நடமாட்டத் தினத்தை எப்படி இனம் காணலாம்?, எவையெல்லாம் அத்தியாவசிய சேவைகள்?, எப்போது பயணத்தடை நீக்கப்படும் அல்லது விலக்கப்படும்? என்று நீண்டு கொண்டே போகின்றது. 'நேற்றிருந்தோர் இன்றில்லை, இன்றிருப்போர் நாளை இல்லை' என்ற பாடல் வரிகளைப் போல, "நேற்றிருந்த நடைமுறை இன்றில்லை, இன்றிருந்த நடைமுறை நாளையில்லை' என சுகாதார நடைமுறைகளும் இந்தப் பயணத்தடைக் காலத்தில் கணத்துக்கு கணம் மாறிக்கொண்டே இருக்கின்றன. உதாரணமாக , 'இப்போது விதிக்கப்பட்ட பயணத்தடை எக்காரணம் கொண்டும் நீடிக்காது. அவ்வாறு வெளிவரும் செய்திகளில் உண்மையில்லை' என்று நேற்றுமுன்தினம் அறிவித்த அதே அரசாங்கம் தான், பயணத்தடையை ஜூன் 7 ஆம் திகதி வரை நீட்டித்து புதிய அறிவிப்பை நேற்று வெளியிட்டுள்ளது. இதனால் எந்த அறிவித்தலைக் கருத்தில்கொள்வது என்று மக்களுக்கு குழப்பம்.

இப்படியான இடியப்பச் சிக்கல் போன்ற முன்னுக்கு பின் முரணான நிலைக்கு காரணம், அரசாங்கம், கொரோனாச் செயலணி, சுகாதாரத்துறை என்பவற்றுக்கிடையே சரியான புரிந்துணர்வு இல்லை என்பதே. எனவேதான் கொரோனாப் பேரிடர் காலத்தில் ஒரே நோக்கம், சிந்தனையோடு மக்களைக் காக்கும் பணியைச் செய்யவேண்டிய இந்த மூன்று தரப்புகளும் தங்கள் மனம்போனபடி புதிய புதிய அறிவிப்புக்களை வெளியிட்டு, தாமும் குழம்பி, மக்களையும் குழப்புகின்றன. கூடவே இந்த மூன்று தரப்புகளுக்குமிடையில் ஒரு பனிப்போரும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றின் விளைவாகவும் ஏட்டிக்கு போட்டியான அறிவிப்புக்கள் வந்தவண்ணமுள்ளன.

சுகாதாரத் துறையினர் குறிப்பாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் 'இப்படி இடைவெளி விட்டு , பயணத்தடை போடாமல் நாட்டை குறைந்த பட்சம் இருவாரங்களுக்கு முழுமையாக முடக்குங்கள்' என்று தொடர்ச்சியாக வலியுறுத்தியபடியே உள்ளது. ஏறக்குறைய இதேபோன்ற கருத்தை சுகாதார இராஜங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளேயும் முன்வைத்திருந்தார். ஒருவேளை அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, சில வாரங்களுக்கு முன்னரே நாடு முடக்கப்பட்டிருந்தால், இப்போது இருப்பதைப் போல கொரோனா பேருருக் கொண்டு அச்சுறுத்தியிருக்காது. ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால் அதனை சுகாதார அமைச்சும் ஏற்கவில்லை, கொரோனா செயலணியின் தலைவரும் இராணுவத்தளபதியுமான சவேந்திர சில்வாவும் ஏற்கவில்லை.

அதற்கு அவர்கள் சொன்ன காரணம் " நாட்டை முடக்கினால் நாளாந்தத் தொழில்புரிவோர் பாதிக்கப்படுவார்கள், நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் " என்பதுதான். ஆனால் அதன் பின்னர் வேறுவழியின்றி இப்போது அடிக்கடி 'லீவு' கொடுக்கப்படும் பயணத்தடையை அமுல்படுத்தும்போது அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படமாட்டார்களா? இலங்கையின் பொருளாதாரம் சரியாதா? ஒருவேளை நாலைந்து நாள்களுக்கு ஒருமுறை நடமாட அனுமதிப்பதன் மூலம் நாளாந்தத் தொழிலாளர்கள் அடுத்து வரும் நாள்களுக்கு தேவையான பணத்தை ஒரே நாளில் சம்பாதித்துவிடுவார்கள் என அரசாங்கம் எண்ணுகின்றதோ? அல்லது அந்த ஒரே நாளில் அமெரிக்க டொலரின் பெறுமதியை இலங்கை ரூபாவின் பெறுமதி 'ஓவர்ரேக்' செய்து விடும் என்று கனவு காண்கிறார்களா? தகுதியற்றவர்களும், மக்கள் நலன் தொடர்பில் சிந்திக்காதவர்களும் ஆட்சி செய்தால் என்னவெல்லாம் நடக்கும் என்பதற்கு இலங்கை மிகச் சிறந்த உதாரணமாக மாறிக்கொண்டிருக்கிறது,

இந்தத் தகுதியற்ற பூனைகளின் விளையாட்டில் சீவன் போவதென்னவோ அப்பாவி மக்களுக்கே!




# தேவையின்றி வெளியில் வருவதை இன்றும் தவிர்த்துக்கொள்ளுங்கள்

*மன். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வலியுறுத்து*

**மனனார், மே 25**

**பயணக் கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்படாமல் நாளை (இன்று) தளர்த்தப்படும்போது, அரசால் வழுங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, மக்கள் தேவையின்றி வெளியில் வருவதை தவிர்த்துக்கொள்ளுங்கள் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:
மன்னார் மாவட்டத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் கிடைக்கப் பெற்ற பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 23 நபர்களுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களாகவும், ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் பணியாளர்களாகவும், சிறைச்சாலை உத்தியோகத்தர்களாகவும் காணப் படுகின்றனர்.
இந்த வருடம் மாத்திரம் 425 நபர்கள் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதம் தற்போது வரை 2 ஆயிரத்து 72 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 412 பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளன.
மன்னார் தாரபுரம் துருக்கி சிட்டிப் பகுதியில் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்ட பெண்களுக்கான கொரோனா இடைநிலைச் சிகிச்சை நிலையத்தில் தற்போது வரை தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட 80 பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் மன்னார், வவுனியா மற்றும் மேல் மாகாணங்களைச் சேர்ந்தவர்களாவர்.
நாளை (இன்று) செவ்வாய்க்கிழமை பயணக் கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்படாமல் பகுதியளவில் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் அரசால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மக்கள் தேவையின்றி வீடுகளில் இருந்து வெளியில் வருவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு அதியாவசிய தேவைகளுக்காக வீடுகளில் இருந்து வரும்போது வீட்டில் இருந்து ஒருவர் மாத்திரமே வெளியில் வருமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

(ம-ப.56)

# முல்லைத்தீவில் கொரோனா கொத்தணி தடுப்பதற்கு தயார்படுத்தல்கள் தீவிரம்

முல்லைத்தீவு, மே 25

முல்லைத்தீவு, மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையால் மாவட்டத்தில் பெரும் கொரோனாக் கொத்தணி உருவாகும் அபாயம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான தயார்படுத்தல்களும் அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் மருத்துவ ரீதியான பாதுகாப்பு வளப்பற்றாக்குறை காணப்படும் நிலையில் அவற்றை நிவர்த்திசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆன்டிஜென் சோதனையில் தொற்று இல்லை என்ற முடிவு கிடைக்கப்பெற்றவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆடைத்தொழில்சாலையில் பணியாற்றியவர்களில் தொற்றாளர்களாகக் கண்டறியப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் முதற்தொற்றாளர்கள் என சுமார் 4 ஆயிரம் பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது. புதுக்குடியிருப்பு பிரதேச மக்களுக்காவே படையினரால் அமைக்கப்பட்டுள்ள 500 கட்டில்களைக் கொண்ட திம்பிலி கொரோனா மருத்துவமனையும், இதனைவிட வேணாவில் பகுதியிலும் படையினரால் அமைக்கப்பட்டுவரும் 300 கட்டில்களைக் கொண்ட கொரோனா மருத்துவமனையும் காணப்படுகின்றது. இவற்றை விட முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை, புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனை மற்றும் மாங்குளம் மருத்துவமனை என்பவை மருத்துவ ரீதியான தயார்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களுக்கு தட்டுப்பாடில்லை

## வர்த்தக சங்கம் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 25**
**யாழ்ப்பாண நகரில் அத்தியாவசிய பொருள்கள் அனைத்தும் தேவையானளவு கையிருப்பில் உள்ளன. எனவே இன்றைய தினம் மக்கள் முண்டியடித்து பொருள்கள் கொள்வனவில் ஈடுபட முயற்சிக்க வேண் டாம்.**

இவ்வாறு யாழ்ப்பாண வர்த்தக சங கத் தலைவர் இ.ஜெயசேகரன் தெரி வித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தகர் கள் இன்று காலை 7 மணியிலிருந்து இரவு 9 மணி வரையில் தமது வர்த் தக நிலையங்களைத் திறந்து வைத் திருப்பார்கள். மக்கள் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி பொருள்கள் கொள்வனவில் ஈடுபட முடியும்.
கொழும்பிலிருந்து போதியளவு பொருள்கள் கொண்டுவரப்பட்டுள் ளன. அத்தியாவசிய பொருள்கள் எவற்றுக்கும் யாழ்ப்பாணத்தில் தட்டுப் பாடில்லை. எனவே பொதுமக்கள் அரசு பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தும் நாள்களில் தேவையான ளவு பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியும்- என்றார். (ஒ,5)

## நெடுந்தீவுக்கான போக்குவரத்து ஒழுங்கு

யாழ்ப்பாணம், மே 25
பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் இன் றைய நாளில் நெடுந்தீவு மக்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகள் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளன என நெடுந் தீவு பிரதேச செயலகம் அறிவித்துள் ளது.
நெடுந்தாரகை படகு நெடுந்தீவிலிருந்து காலை 7 மணிக்குப் புறப்படும். குறி காட்டுவானை படகு வந்தடையும்போது யாழ்ப்பாண நகருக்குச் செல்வதற்குரிய இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து ஒன்று அங்கிருந்து புறப்படும் குறிகாட்டுவானிலிருந்து பி.ப. 3 மணிக்கு நெடுந்தாரகை நெடுந்தீவு நோக்கி மீண்டும் செல்லும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## ஜனாதிபதி, பிரதமரை சந்தித்தார் சட்டமா அதிபர்

கொழும்பு, மே 25
ஓய்வுபெறும் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை யும், பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவையும் நேற்றுச் சந்தித்தார். தப்புல டி லிவேராவின் சேவையை பாராட்டிய ஜனாதிபதி, அவ ரது ஓய்வு வாழ்க்கைக்காக வாழ்த்துக்க ளைத் தெரிவித்தார். தப்புல டி லிவேரா, நாட்டின் 47ஆவது சட்ட மா அதிபர் ஆவார். (த-இ)

## நாகபூசனி அம்மன் கோவில் பிரதம குரு காலமானார்



யாழ்ப்பாணம், மே 25
யாழ்ப்பாணம் நயி னாதீவு நாகபூசணி அம்மன் கோவில் பிரதம குருவும், சர் வதேச இந்துமத குரு பீடாதிபதியுமான சிவ சிறி சம்பு மஹேஸ் வரக் குருக்கள் நேற்றுக் காலமானார். நேற்று அதிகாலை அவர் கால மானார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## நாட்டில் நேற்று 2,970 தொற்று

நாட்டில் 2 ஆயிரத்து 970 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இரா ணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 67 ஆயி ரத்து 171 ஆக அதிகரித்துள்ளது.
கொரோனாத் தொற்றுக் காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனி மைப்படுத்தல் மையங்கள் என்பன வற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்து 58 ஆக உயர்வடைந்துள்ளது.
இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண் ணிக்கை ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 903 ஆக அதிகரித்துள்ளது. (த22)

## திருட்டுப் பேர்வழிகள் கைதடி பாலத்தடியில் கைது

யாழ்ப்பாணம், மே 25
நாவற்குழிப் பகுதியில் தொடர் கொள் ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவரை, இளை ஞர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து கைதடியில் நேற்றுக் கைதுசெய்தனர்.
யாழ் நாவற்குழியில் அண்மைக் கால மாக தொடர் களவு, கொள்ளைகள் இடம் பெற்று வந்தன. ஏற்கனவே இந்தப் பகுதி இளைஞர்களின் செயற்பாட்டால் பலர் மடக்கிப் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.
நாவற்குழியில் பல வீடுகளில் ஆள்களில் லாத வேளைகளில் களவு மற்றும் வழிப் பறிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின் றன. நேற்றுமுன்தினமும் கோவில்களில் திருட்டு இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய வர்கள் தேடப்பட்டு வந்தநிலையில், சந் தேகநபர்கள் இருவரும் கைதடி பாலத் துக்கு அண்மையில் வைத்து கைதுசெய் யப்பட்டுள்ளனர். (த-26)

## 5 நாள்களின் பின்னரே கோவிட் அறிகுறிகள்!

### பேராசிரியர் மலிக் தெரிவிப்பு

கொழும்பு, மே 25
கொரோனா ஒருவருக்குத் தொற் றால், நோய் அறிகுறிகள் வெளிப்ப டுவதற்கு குறைந்து ஐந்து நாள்கள் எடுக்கலாம் என்று ஹொங்கொங் பல்கலைகழகப் பேராசிரியர் மலிக் பீரிஸ் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஒரு வர் தனது வீட்டில் உள்ள ஒருவருக்கு தொற்றைப் பரப்பினால், வீட்டில் உள்ளவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படுவதற்கு ஐந்து நாள்கள் எடுக்கலாம். இதன் காரணமாக அவர்களை இரண்டு வாரங்களுக் குத் தனிமைப்படுத்த வேண்டும்.
நாட்டின் அனைத்து மாவட்டங்களி லும் கொரோனாவால் பாதிக்கப்பட்ட வர்கள் இருப்பதால், மாகாணங்க ளுக்கு இடையிலான போக்குவரத் துக் கட்டுப்பாடுகள் மூலம் கொரோ னாவைக் கட்டுப்படுத்த முடியாது.
ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் இந்தக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தால் அவற்றால் பயன் ஏற்பட்டிருக்கும். தற்போது அது சாத்தியமற்றது. மூன்று நாள்கள் போக்குவரத்துத் தடையின் பின்னரும் கொரோனாவால் பாதிக்கப் பட்ட ஒருவர் அதனைப் பரப்ப முடியும் என்றார். (ஏ-4)

# வாகன இறக்குமதியை இடைநிறுத்தத் தீர்மானம்

## பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, மே 25
நாட்டின் தற்போதைய சூழ்நிலை யைக் கருத்திற்கொண்டு குறைந்த எண்ணிக்கையிலான வாகனங்கள் அல்லது இறக்குமதியை இடைநிறுத் துவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மா னிக்கப் பட்டுள்ளது.
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலை மையில் சூம் தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத் தின்போதே இவ்வாறு தீர்மா னிக்கப் பட்டுள்ளது. தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை மற்றும் நிதி நிலை தொடர் பில் கவனம் செலுத்தி வாகன இறக் குமதியை மேலும் மட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக அமைச்சரவை யில் அமைச்சர்கள் சுட்டிக்காட்டி யுள் ளனர். அதற்கமைய குறைந்த எண் ணிக்கையிலான வாகனங்கள் அல் லது இறக்குமதி செய்வது தொடர்பில் இதற்கு முன்னர் காணப்பட்ட திட் டத்தை அமைச்சரவைத் தீர்மா னத் துக்கு அமைய தொடர்ந்து இடை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்று பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)


## மரண அறிவித்தல்

### பெரியதம்பி பற்குணராசா



மூளாய் தெற்கு மூளாயை பிறப்பிடமாகவும், மயிலங்கூடல் இளவாலையை வதிவிடமாக வும் கொண்ட பெரியதம்பிபற்குணராசா அவர் கள் 23.05.2021 ஞாயிற்றுக்கிழமை இறைவ னடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான UNP பெரியதம்பி-முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல் வனும், காலஞ்சென்றவர்களான விநாயகர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதி யரின் மருமகனும், இராசலட்சுமி (ஓய்வு நிலை உப அதிபர், யா/ கீரிமலை நகுலேஸ்வரா ம.வி) அவர்களின் அன்புக் கணவரும், துஸ்யந்தன் (ஆசிரியர், யா/ இந்துக் கல்லூரி), கார்த்திகா (உதவிப் பொறியியலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகா லமைப்பு சபை), துஷாந்தன் (கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப் பளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகன்யா (கிளி/செல்லியாதீவு அ.த.க.பா), மதிவண்ணன் (தொழில்நுட்பவியளாளர், இலங்கை புகையிரத சேவை), ஹிந்துஜா (பட்டதாரி பயிலுனர் / உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், து.சந்தோஷ், து.அக்ஷரா, து.ஆதிணியா, ம.மஹதி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பத்மநாதன், பத்மாவதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன், கணேசலிங்கம் மற்றும் காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாட்டின் தற்போதையா சூழ்நிலை காரணமாக ஞாயிற்றுக்கிழமை (23.05.2021) அன்று 2.30 மணியளவில் இடம் பெற்று கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனகம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலங்கூடல், இளவாலை.
077 444 4588

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தவராசா ரதீஸ்

3ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா ரதீஸ் அவர்கள் நேற்று (24.05.2021) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தவராசா மற்றும் சந்திராதேவி அவர்களின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற ரத்தினம் யோகம்மா தம்பதியரின் அன்பு பேரனும், தாரா, கண்ணன், காலஞ்சென்ற சின்னத்தம்பி, வீமு, காலஞ்சென்ற புலித்தம்பி, ரவி, ரமேஷ் அவர்களது பெறா மகனும், சிந்தாமணி, வளர்மதி அவர்களது மருமகனும், யதுராஜ், விசித்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவராசா, யோகராசா, அருமராசா ஆகியோரின் அன்பு மருமகனும் தர்சிகா, வாசனின் மைத்துனரும், காலஞ்சென்ற தியாகலிங்கம் ராணி அவர்களின் அன்பு பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2021) செவ்வாய்க் கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 11 . 1935



மறைவு 24 . 05 . 2021

## சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரக் குருக்கள் மகேஸ்வரக் குருக்கள்

யாழ்ப்பாணம் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரக்குருக்கள் மகேஸ்வரக் குருக்கள் (நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய ஆதீன பரம்பரை குருமணி, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பிரதம குரு, தம்ப கைப்பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி கோயில் பரம்பரை குருமணி, புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சிலம்பதி கந்தசுவாமி கோயில் பரம்பரை குரு, அவர்கள் நேற்று (24.05.2021) திங்கட்கிழமை அதிகாலை அம்பிகையின் அருட்பாத கமலங்களில் இறையடி சேர்ந்தார்.

அமரர் காலஞ்சென்ற ஜம்புகேஸ்வரக்குருக்கள் மீனாம்பா அம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், ஸ்ரீமதி சீதாலஷ்மி அம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீமதி சுபதாம்பிகை அம்மா (அத்தியடி) காலஞ்சென்ற ஸ்ரீமதி இரங்கநாயகி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரும், பிரம்மஸ்ரீ நதிசுதசர்மா (கொழும்பு), பிரம்மஸ்ரீ பாலகைலாசநாத சர்மா (துறைத்தலைவர் சமஸ்கிருதத்துறை யாழ். பல்கலைக்கழகம்), ஸ்ரீமதி காதம்பரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் (குருமணி- நயினை நாகபூசணி, சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்), ஸ்ரீமதி ஜெயந்தகலா (கொழும்பு), ஸ்ரீமதி மகாலக்ஷ்மி (சுதுமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மனஷ்வினி, நிஷேவிதா, தேஜோவதனசர்மா, மகேஸ்வரநாதசர்மா, சுப்பிரமணியநாத சர்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2021) செவ்வாய்க்கிழமை கோம் பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு பாலசுப்பிரமணியம்



பிறப்பு
05.02.1949

இறப்பு
24.05.2021

கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை பிறப்பிட மாகவும் அரசடி வீதி, பருத்தித்துறையை வசிப்பிட மாகவும் கொண்ட மார்க்கண்டு பாலசுப்பிரமணியம் நேற்று (24.05.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், கமலா தேவி, மல்லிகாதேவி, காலஞ்சென்ற குலசிங்கம் ஆகியோரின் சகோதரனும், பாமாவதியின் அன்புக் கணவரும், அனிதா (கனடா), அருந்தன் (கனடா), ஐங்கரன் (முகாமையாளர் - N.D.B வங்கி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05. 2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க காலக்கெடு

## பாடசாலை ஆவணங்கள் கட்டாயமில்லை



**கொழும்பு, மே 25**

**பல்கலைக்கழகங்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 11ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். அதேவேளை விண்ணப்பதாரிகள், பாடசாலை ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவிக்கையில்,

விண்ணப்பதாரர்கள் தேவையான ஆவணங்களை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். பாடசாலை அதிபரின் சான்றிதழ்கள் தேவையில்லை.

அத்தோடு விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள கிராம அலுவலரின் சான்றிதழ்களை தனியார் விண்ணப்பதாரர்கள் பெற வேண்டியது அவசியமில்லை.

பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, பாடசாலை கல்வி நவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமானதும் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியும். ஒன்லைனில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் - என்றார். (எ-4)

## பரீட்சைகள் திணைக்களத்தால் புதிய செயலி

கொழும்பு, மே 25

வீட்டில் இருந்தவாறே கைத்தொலைபேசி மூலம் பரீட்சைகள் திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, 'எக்ஸாம் ஸ்ரீ லங்கா' என்ற பெயரிலான செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பரீட்சை சான்றிதழ்களை உறுதிப்படுத்துதல் மற்றும் பெறுபேறுகளை உறுதிப்படுத்தல் ஆகியவை உட்பட பல்வேறு சேவைகளையும் இந்த செயலியின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். (எ-4)

## மருந்து என்று கூறி ஹெரோய்ன் கடத்தல்



கொழும்பு, மே 25

நோயாளியின் மருந்தெனத் தெரிவித்து, ஹெரோய்னைக் கடத்திச் சென்ற நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இங்கிரிய கெட்டகெடல்ல பொலிஸ் வீதித் தடையில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீதித் தடையால் வருகைதந்த வாகனத்தை நிறுத்திய பொலிஸார், அதனைச் சோதனையிட்டனர். அங்கிருந்து 5 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

நோயாளி ஒருவருக்கான மருந்தென சந்தேகநபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-4)

## நாட்டை முடக்கினால் ரூ.15 பில்லியன் நட்டம்

### இராஜாங்க அமைச்சர் எதிர்வு கூறல்

கொழும்பு, மே 25

நாட்டை முழுமையான முடக்கினால், அதன் மூலம் நாளாந்தம் 15 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்

கொரோனாத் தொற்றால், நாட்டின் பொருளாதாரம் சீர்குலைவதற்கு இடமளிக்க முடியாது. போர் இடம் பெற்ற காலப்பகுதியில் போர்த் தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள அதிக அளவிலான நிதி தேவைப்பட்டது.

அதேபோன்று கொரோனாத் தொற்றுச் சந்தர்ப்பத்திலும் சுகாதார உபகரணங்களைக் கொள்வனவுசெய்யவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் பெருமளவு நிதி தற்போது தேவை. இந்த நிலையில் நாட்டை முற்றாக முடக்குவதன் மூலம் வருமானம் முழுமையாகத் தடைப்படும் - என்றார். (எ-4)

## ஆடைத் தொழிற்சாலைகளால் இன்னொரு கொத்தணி அபாயம்

### சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவிப்பு



கொழும்பு, மே 25

நாட்டில் ஆடைத் தொழிற்சாலைகளால் இன்னொரு கொரோனாக் கொத்தணி உருவாகி வருகின்றது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்துள்ளார்.

ஆடைத் தொழிற்சாலைகளால் தற்போது சிறிய கொரோனாக் கொத்தணிகள் உருவாகி வருகின்றன. எனவே சுகாதார அதிகாரிகள் மற்றும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் நிலைமை கட்டுக்கடங்காமல் போகக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டாரகம கெஸ்பேவ பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையில் 150 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனை அடுத்து குறித்த தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (எ-4)

## தடுப்பூசியை வழங்க அமெரிக்கா பின்னடிப்பு?

கொழும்பு, மே 25

கொரோனாத் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்குவதற்கு, இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தான் உற்பத்திசெய்யும் தடுப்பூசிகளின் 13 வீதத்தை ஜூன் மாதத்துக்குள் உலக நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளத் தீர்மானித்துள்ளது. இந்தத் தடுப்பூசிகள் சமத்துவமான முறையிலும், புள்ளி விபரங்களைப் பின்பற்றியும் வழங்கப்படும். எந்த நாடு இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் என்பது இதுவரை தெரியவில்லை. ஆனால் இது குறித்து விரைவில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## கரும்பூஞ்சை நோயும் இலங்கைக்கு ஆபத்தே

### முன்னெச்சரிக்கை அவசியம் என்கின்றது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

இந்தியாவிலிருந்து பரவக்கூடிய கரும்பூஞ்சை நோயும் உயிராபத்து மிக்கது. எனவே இதனை எதிர்கொள்வதற்கு இலங்கை தயாராக வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.



இது தொடர்பில் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவிக்கையில்,

அம்பாறையில் கரும்பூஞ்சை நோய் பரவியுள்ளது என்று சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவல் உண்மையில்லை. அம்பாறை மாவட்டத்தின் மருத்துவ நிபுணர்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் துரதிஸ்டவசமாக இந்த நோய் பரவினால் அதனை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும்.

இந்தியாவில் பரவுவதால் இலங்கைக்குள் அது நுழைந்திருக்கலாம். கரும்பூஞ்சையால் பாதிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் 24 மணித்தியாலத்தில் உயிரிழப்பர். ஏனெனில் அவர்களுக்கான நோய் எதிர்ப்புசக்தி இந்த நோயை எதிர்ப்பதற்கான வலிமையற்றதாகவே காணப்படும். இதன் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் தயாராக இருக்க வேண்டும் - என்றார். (எ- 4)



## மின்னல் தாக்கி 17 தொழிலாளர்கள் மருத்துவமனையில்

நுவரெலியா, மே 25


தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்திருந்த 17தொழிலாளர்கள் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகினர்.

இந்தச் சம்பவம் நுவரெலியா கொட்டகலை டிரேட்டன் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றது.

டிரேட்டன் பகுதியிலுள்ள தொழிலாளர்கள் கொழுந்து பறித்துவிட்டு, நண்பகல் 12 மணியளவில் அதனை பொதுவெளியில் வைத்து அளவிடுகையில் மின்னல் தாக்கியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானவர்கள் சுய நினைவை இழந்தனர். அதிர்ச்சியால் அவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**(கொழும்பு ரெலிகிராப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம் இது)**

தமிழில்: கணபதி சர்வானந்தா

# வெட்கப்படவேண்டிய தடுப்பூசி மோசடிகள்!

ஊழல் என்பது இலங்கைக்குப் புதிதல்ல. எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்பது இலங்கையில் வெள்ளிடைமலை. இந்த பெரும் மோசடிகள் தற்போது கொரோனாவுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளுக்குள்ளும் வியாபித்துள்ளன என்பதுதான் பெரும் துயரம். கொரோனாவைக் கட்டுப்படுத்த இறக்குமதிசெய்யப்பட்ட ஏராளமான தடுப்பூசிகள், இலங்கையில் பணத்துக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், அதிகாரிகள் எனப் பலரும் இந்தப் பெரும் இழிசெயலில் ஈடுபட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது. 'அரசாங்க மருத்துவ அலுவலர் சங்கம்' இந்தப் பெரும் மோசடிகளைக் கடுமையாகக் கண்டித்துள்ளதுடன் இது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளது.




இலங்கையில் நடைபெறும் முறைகேடுகள் உலகிலுள்ள ஏனைய நாடுகளைப்போல அவ்வளவு இலகுவில் வெளிவராது. அவை, அரச - தனிநபர் செல்வாக்குகளால் மூடி மறைக்கப்பட்டு விடும். அந்த வகையில், தற்போது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இந்தத் தடுப்பூசி முறைகேடுகள் தொடர்பாகவும், முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுபவர்கள் தொடர்பாகவும் எவ்வளவு தூரம் காத்திரமான நகர்வுகள் மேற்கொள்ளப்படும் என்பது கேள்விக்குறிதான்.

**தடுப்பூசிகள் எங்கு சென்றன?**

தடுப்பூசிகளில் மோசடி இடம்பெற்றன என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டில் முதலாவது சூத்திரதாரி வேறு யாருமல்லர், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சியின் கணவர் காஞ்சனா ஜெயரத்ன தான். இவரே 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்ற கதையில் வருவதைப் போன்ற, தடுப்பூசிகளின் அலி பாபா, சுகாதார அமைச்சின் இடங்கள் மற்றும் பாதுகாப்புச் செயலகம் என்பவற்றில் தனிப்பட்ட முறையில் சட்டவிரோத 'தடுப்பூசி கிளினிக்குகளை' நடத்தினார் என அறியக் கிடைக்கின்றது.

இந்தக் கிளினிக்கில் ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'ஸ்புட்னிக்' வகை தடுப்பூசிகள் அரசியல் செல்வாக்குக் கருதியும், விற்பனை நோக்கிலும் வழங்கப்பட்டன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டு வெளிப்படையாக முன்வைக்கப்பட்ட பின்னர் மேற்படி கிளினிக் அவசரமாக மூடப்பட்டுள்ளது. இதையடுத்து இன்னபல தகவல்கள் மறைக்கப்பட்டுவிட்டன.

**மோசடியில் இரு அமைச்சர்கள்**

இந்த உலகில் இடம்பெறும் மோசடிகளில் முக்கிய நபர்கள் அரசியல் வாதிகள்தான் என்பதை அனைவரும் அறிவர். இலங்கையில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் தடுப்பூசி மோசடிக்குப் பின்புலத்திலும் இரு அமைச்சர்கள் உள்ளனர். ஒருவர் ஹெகலிய ரம்புக்வெல, இன்னொருவர் அமைச்சர் பந்துல குணவர்த்தன. ஹெகலிய ரம்புக்வெல சுமார் 2 ஆயிரம் தடுப்பூசிகளை ஊடகக் குழுவொன்றுக்கு தேவை என்று கேட்டுப் பெற்றுக்கொண்டுள்ளார். ஆனால், அந்தத் தடுப்பூசிகளில் பெரும்பாலனவை, என்ன நோக்கத்துக்காக பெறப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் உண்மை.





அதேபோல அமைச்சர் பந்துல குண வர்த்தன, 'கலைஞர்கள் குழுவுக்கு' என்று சில தொகை தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். அவையும் 'தேர்தல்கால வாக்குகளை' இலக்காக வைத்துப் பயன்படுத்தப்பட்டன என்றும் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

அதேபோல தடுப்பூசியைச் செலுத்தும் வரிசையைக் குழப்பியவர்களில் சில கலைஞர்களும் உள்ளனர். நாடு பேராபத்துக்குள் உள்ள நிலையில், தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் அவசர தேவை கருதி அடையாளமிடப்பட்டவர்களுக்கு முடுக்கிவிடப்பட்ட நிலையில், கலைஞர்கள் சிலர் என்ன அடிப்படையில் அவற்றைப் பெற்றுக்கொண்டனர் என்ற கேள்வி இங்கே எழுவது யதார்த்தமானதே!.



**குறுக்கே வந்த பண முதலைகள்**

இந்தத் தடுப்பூசி மோசடியில் முன்வைக்கப்பட்ட இமாலயமான குற்றச்சாட்டு, செல்வந்தர்கள் சிலர் 5 ஆயிரம் ரூபா செலுத்தி தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதே.

அஸ்ராஜெனகா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவே இந்தக் 'கார்ப்பரேட் சிந்தனை' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

உலகில் எந்தவொரு நாகரிக மயப்பட்ட அரசும், தடுப்பூசியை பணத்துக்கு இதுவரை விற்றதாகத் தகவலில்லை. அரசாங்கங்களுக்கு இடையிலேயே அந்த விற்பனையும், பரிமாற்றமும் இடம்பெறுகின்றன. இவ்வாறிருக்கையில் தன் சொந்த மக்களுக்குத் தடுப்பூசியை விற்கும் நிலையென்பது ஆசியாவின் அதிசயமன்றி வேறென்ன. பங்களாதேஷ், பூட்டான் மற்றும் ஆபிரிக்க குடியரசுகள் போன்ற நாடுகள்கூட இலங்கையை விட சிறப்பாக செயற்படுகையில், இலங்கை மட்டும் ஏன் அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது? சமூக மருத்துவ நிபுணர் என்று அழைக்கப்படும் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே அஸ்ராஜெனகா தடுப்பூசியை வாங்குமாறு தனியார் துறையிடம் வேண்டுகோள் விடுத்து தமது பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகிறார். ஒரு மனிதாபிமான ஆயுதமாகக் கொடுக்கப்பட வேண்டிய தடுப்பூசியை வணிக ஆயுதமாக மாற்றுவதற்கான உரிமையை அவருக்கு வழங்கியது யார்?

சுகாதார அமைச்சரின் கணவர், அரசியல்வாதிகள், பணக்காரர்கள், கலைஞர்கள், ஊடக நபர்கள் ஆகியோருக்கு தடுப்பூசியை அரசியல் ஆயுதமாக மாற்றுவதற்கான உரிமையை வழங்கியவர் யார்? முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மலிக் சமரவிக்ரம மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் அஸ்ராஜெனெகா தடுப்பூசியை நாமல் ராஜபக்சவிடம் கோரியதன் மூலம் முதல் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டனர் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. சுகாதாரப் பாதுகாப்பற்ற குடி யேற்றங்கள், மீன் சந்தைகள் போன்ற ஆபத்தான சூழ்நிலைகளில் வாழ்பவர்கள் முதல் தடுப்பூசி பெறவேண்டுமா? அல்லது பாதுகாப்பான சூழ்நிலையில் வசிக்கும் மாலிக் சமரவிக்ரமா மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் பெறவேண்டுமா? இதை முடிவுசெய்ய நாமல் ராஜபக்ச யார்?. இதை மாலிக் சமரவிக்ரமவால் மறுக்க முடியுமா? அல்லது மங்கள சமரவீரதான் மறுப்பாரா?

ஏழைகளும் சட்டத்தை மதிப்பவர்களும் வரிசையில் காத்து நிற்கும்போது, அரசியல்வாதிகளுக்கும், அவர்களுக்குத் தெரிந்தவர்களுக்கும், பணக்காரர்களுக்கும் மோசடி முறையில் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இதுதான் நம் கண் முன்னே மூடிமறைக்கப்பட்ட உண்மை. இந்த அரசியல்வாதிகள் எல்லோரும் அரசியல் கட்சிகள் என்ற எல்லைகளில் ஒன்றாகவே உள்ளனர். தடுப்பூசியைக் கொடுப்பதில் மற்றும் எடுத்துக்கொள்வதில் அவர்கள் தங்களது சொந்த அரசியல் நோக்கத்துக்காக, அரசியல் பிழைப்புக்காக வெட்கமின்றி ஒன்றுபட்டுள்ளனர்.

மருத்துவ உலகத்திடமிருந்து தடுப்பூசித் திட்டத்தை கைப்பற்றி அதை இராணுவமயமாக்கியதற்காக அரசு வெட்கப்பட வேண்டும். அதைவிட வெட்கம் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் தடுப்பூசி மோசடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு

யாழ் போதனா வைத்தியசாலையில் 39 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், விடுதிச் சகோதரியாகவும் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

### திருமதி உஷா தனபாலசிங்கம்



அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துக்கள்

**தாதிய நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



நயினாதீவை பிறப்பிடமாகவும் சுதுமலையை வதிவிடமாகவும், சுதுமலை புவனேஸ்வரி அம்மனின் நிரந்தர குருக்களாகவும், இந்து மத பீடாதிபதியாகவும் வாழ்ந்த

### சிவஸ்ரீ ஜம்புமகேஸ்வரக் குருக்கள்

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல புவனேஸ்வரி அம்மாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுதுமலை**
**திருமதி சி.பாலேந்திரன், குமரன், நந்தன்**
**திருமதி இ. உருத்திரமூர்த்தி**

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 13 . 04 . 1939



விண்ணில் 20 . 05 . 2016

### முத்தையா கிருஸ்ணசாமி

திதி :- பூர்வபட்ச சதுர்த்தசி
25.05.2021

பாசத்தின் உறைவிடமாய், அன்பின் திருவுருவாய்,
கருணையின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எங்கள் அனைவரையும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஐந்து ஆண்டு காலம் சென்றாலும், கவலைகள்
மறையவில்லை. ஆண்டுகள் பல சென்றாலும் எம்மை
விட்டு நீங்காது உங்களின் பிரிவு.......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 . 04 . 1940



மறைவு 11 . 04 . 2021

கடந்த (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் திரு.செல்லையா சிவராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (25.05.2021) செவ்வாய்க்கிழமை நடைபெறும். கொவிட் கட்டுப்பாட்டு நடைமுறையால் தங்களை மதியபோசன நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்காக மனம் வருந்துகின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வம் காலமான செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் அளித்தும் வேறு பல உதவிகள் புரிந்தும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மீசாலை கிழக்கு, மீசாலை.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 02 . 1959



மறைவு 23 . 05 . 2021

### ஞானரத்தினம் பரமேஸ்வரன்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட ஞானரத்தினம் பரமேஸ்வரன் நேற்று (23.05.2021) அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானரத்தினம், நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், தேவராணி, கனகலிங்கம், கிருஸ்ணவேணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சியாமளாதேவின் பாசமிகு கணவரும், சாமினியின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சிவசம்பு குமாரலிங்கம்

**(உரிமையாளர், சிவா ஸ்ரோர்ஸ், மண்டைதீவு)**

**மண்ணில் : 22.10.1939** **விண்ணில் : 22.05.2021**



யாழ்ப்பாணம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு குமாரலிங்கம் அவர்கள் 22.05.2021 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மஞ்சுளாதேவி அவர்களின் அன்புக் கணவரும், உதயராணி, உதயமதி, தவசீலன், உதயரஞ்சினி, உதயமலர், ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், விஷயகுமாரன், யோகேஸ்வரன், ஈசானி, மோகனதாஸ், உருத்திரநாதன், றசிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவரான அமிர்தாம்பாள அவர்களின் அன்புச் சகோதரனும், விஷயதீபன், பிரியலோஜினி, சசிறாஜ், நந்ததீபன், ஜனார்த்தனன், கஜலக்ஷி, கபில்தாஸ், தனுஜான், அனுஜிகா, ரக்சான், சுபசுதன், கபீசன், கோபிஷா, சாருசன், ஹர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும், தஷ்வின், துளஷ்வின், சுவாதின், சர்வின், தியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**100/5, சம்பியன் லேன்,**
**கொக்குவில் கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நீரில் மூழ்கி பெண் சாவு

திருகோணமலை சாந்திபுரம் பகுதியில் வாய்க்காலில் குளிக்கச் சென்ற வயோதிபப் பெண்ணொருவர் வாய்க்காலுக்குள் வீழ்ந்து உயிரிழிந்தார்.

அவரது சடலம் வாய்க்காலில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்ட பெண் திருகோணமலை சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த அயிலந்தன் பெருமாள் (வயது 78) என்று தெரிவிக்கப்பட்டது. (து-இ)

## எதிர்க்கட்சிகளை ஒடுக்கிறது அரசு

ஜே.வி.பி. குற்றச்சாட்டு

நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பதில், எதிர்கட்சிகளை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது என்று ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுக நகர சட்டவரைவுக்கு எதிராக நாங்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்துக்காக நீதிமன்றம் செல்வதற்கு பொலிஸார் தயாராகி வருகின்றனர். நாங்கள் தனிமைப்படுத்தல் சட்டங்களைப் பின்பற்றி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தோம். கொரோனாத் தொற்று நிலவரம் மோசமாக உள்ளதை சுகாதாரத் துறையினர் சுட்டிக் காட்டினால், அதனைச் சரிசெய்வதற்கு பதில் அவர்களை மௌனமாக்க அரசு முயல்கின்றது. இதனூடாக கொரோனாத் தொற்று நிலவரத்தை மறைக்க முயல்கின்றது என்றார். (ம-எ4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு . 31 . 10 . 1932

இறப்பு . 22 . 05 . 2021



## திருமதி சண்முகம் இரத்தினம் (நாகேஸ்வரி)

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் இரத்தினம் (நாகேஸ்வரி) அவர்கள் கடந்த 22.05.2021 சனிக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சண்முகம் (முன்னாள் பிரதம எழுதுவினைஞர், கச்சேரி, மன்னார்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மருதடியார் - சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து ஆகியோரின் அருமை மருமகளும் குணேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான படிகலிங்கம் நீலகண்டன் ஆகியோரின் மூத்த சகோதரியும் காலஞ்சென்ற திவ்யபவானி மற்றும் வசந்தகுமார் (இலண்டன்), நளினி (அவுஸ்திரேலியா), வசந்தி (அவுஸ்திரேலியா) சாந்தி (அவுஸ்திரேலியா) துஷ்யந்தி (மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வ.மா.) ஆகியோரின் அருமைத்தாயாரும் காலஞ்சென்ற சிவமோகன் மற்றும் கமலா (இங்கிலாந்து), விமலேஸ்வரன் (அவுஸ்திரேலியா), கணேசன் (அவுஸ்திரேலியா), உதயன் (அவுஸ்திரேலியா), வைத்திய கலாநிதி குமரவேள் (மாகாண சுகாதாரத் திணைக்களம், வ.மா.) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவநயனி - சர்வேஸ்வரா, சிவசங்கரி - கௌரிசங்கர், ரெபேக்கா, கஜன், கார்த்திக், நிவேதா, ஸ்ரீலக்ஷ்மி - அஸ்வின், சாய்பாரதி, விஜய், நிலானி, எழினி, வேளினி, வேணிலா ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் குகப்பிரணவி, மாயா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சாயி பஜனை நிகழ்வின் பின்னர் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் 23.05.2021 அன்று 12.00 மணியளவில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது.

இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள், உரித்துடையோர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.


**32/2, விதானையார் வீதி,**
**சுண்டிக்குளி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சுந்தரராஜா சுதாகரன்

**(கிஷோத் வெல்டிங் வேக்ஸ் சொப் உரிமையாளர்)**

காளிகோவிலடி மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராஜா சுதாகரன் கடந்த (19.05.2021) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரராஜா (மணியம்) கமலாதேவி (லீலா) தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற யோசப்வாஸ் அரியமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், தேவப்பிரியாவின் பாசமிகு கணவரும், ஜிஷானந்தி, கிஷோத்மன், காருயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யசிதரனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிறிதரன், சறோயினி, கீதா ஆகியோரின் அன்பு சகோதரனும், காந்தன், சிற்சபேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், றொசாத், கெவின், யசிந்தன், சஜீபனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (20.05.2021) அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, மல்லாகம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 282 1924**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

# மரண அறிவித்தல்

மண்ணில் . 09 . 03 . 1961

விண்ணில் . 24 . 05 . 2021



## கந்தையா அன்னலிங்கம்

காரைநகர் களபூமி (குண்டாங்கரை) பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அன்னலிங்கம் நேற்று (24.05.2021) அதிகாலை 3.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவகாமிப்பிள்ளை (தங்கம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பேரம்பலம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், சதிஸ்குமார், தினேஸ், விஜிதாவின் அன்புத் தந்தையாரும், புஸ்பராணி, புவனேஸ்வரி, தவமணி, வாலாம்பிகை, லலிதாம்பிகை ஆகியோரின் சகோதரரும், சச்சிதானந்தம், அம்பலவாணர், கணேசபிள்ளை, சச்சிதானந்தசிவம், ஆராமுது, லோகேஸ்வரி, சரோஜினி தேவி, சண்முகராசா, திலகவதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.05.2021 வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி - 00[illegible]**
**00[illegible]**

---

# மரண அறிவித்தல்

பிறப்பு . 22 . 12 . 1941

இறப்பு . 22 . 05 . 2021



## திரு. செல்வத்துரை குகதாசன்

**(ஓய்வுபெற்ற லிகிதர்)**

யாழ் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வத்துரை குகதாசன் அவர்கள் 22.05.2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை-மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி இராசலக்சுமி தம்பதியரின் அன்பு மருகனும். காலஞ்சென்ற இராஜநாயகி (இந்திராணி) அவர்களின் அன்புக் கணவரும், சதானந்தன் (காலஞ்சென்ற) - சிறிசெல்வசாந்தகுமாரி அவர்களின் அன்பு சம்பந்தியும், சதீஸ் (London), ஜினேஸ்குமார் (Accountant-London) ஆகியோரின் பாசமிகு தந்லதயும், கார்த்திகாயினி (London) அவர்களின் அன்பு மாமனாரும், அபிசயன் (London), அஸ்வின் (London) ஆகியோரின் அன்புப் பேரனும், சக்திதாசன், கெஜமோகனா, கமலாம்பிகை, நகுலேஸ்வரன் (காலஞ்சென்ற), சத்தியபாமா, நகுலேஸ்வரி, சாரதா, ஜெயதாசன், வசந்தி, பிறேமினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23.05.2021 ஞாயிற்றுக்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் தகனம் செய்யப்பட்டதென்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**சதீஸ் - 00447958695734**
**ஜினேஸ்குமார் - 00447506186795**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா அலைகள் அடிக்கடி உருவாகும்!

## மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 25**



**ஒன்றுகூடும் எந்த இடத்திலும் எவருக்கும் தெரியாமலேயே கொரோனாத் தொற்றுப் பரவல் இடம்பெற வாய்ப்புள்ளது. அதனால், அடிக்கடி கொரோனா அலைகள் உருவாகக்கூடும். என்று தொற்று நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் ஷன்ன டீ சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வைரஸ் தொற்றுப் பரவலின் இறுதியைக் காண்பது கடினம். சில காலங்களுக்கு, சமூகத்தில் இந்த வைரஸ் பரவல் இருந்துகொண்டே இருக்கும். அதனால், அடிக்கடி கொரோனா அலைகள் உருவாகக் கூடும். விசேடமாக, நீங்கள் ஒரு தொற்றாளராக உருவாகுவது, உங்களுக்குத் தெரியாமலேயே இடம்பெறக்கூடும்.

இவ்வாறான பல சம்பவங்கள், எமது நாட்டுக்குள் இடம்பெற்றதை கடந்த காலங்களில் கண்டுள்ளோம். அதனால், நாம் நம்மைப் பற்றியும் நமது குடும்பத்தைப் பற்றியும், நமது நாட்டைப் பற்றியும் சிந்தித்து, ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தவிர்க்க முடியாத ஒன்றுகூடல்களின்போது, கட்டாயமாகச் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும் - என்றார். (எ-4)

# 103 வயது மூதாட்டி கொரோனாவால் சாவு

கொழும்பு, மே 25



103 வயதுடைய மூதாட்டியொருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

கினிமெல்லகஹ தெற்கைச் சேர்ந்த மூதாட்டி, கடந்த 2 மாதங்களாக நோய் வாய்ப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் அவர் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார். இதனையடுத்து அவரது சடலம் கராப்பிட்டிய போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கு அவருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அதில் அவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (எ - 4)

# இரண்டு வாரங்கள் முடக்கம் அவசியம்

## சுகாதாரப் பரிசோதகர் சங்கமும் வலியுறுத்து

கொழும்பு, மே 25



இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையைக் கட்டுப்படுத்த, குறைந்தபட்சம் இரண்டு வாரங்களாவது நாட்டை முழுமையாக முடக்க வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்.

நாம் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதால், அனைவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். நாட்டில் நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகள் ஓரளவு கொரோனா பரவலைக் கட்டுப்படுத்திய போதும், தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குப் போதாது.

குறைந்தது இரண்டு வாரங்களுக்கு நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் - என்றார். (எ-4)

# கொவிட்–19 சட்டவரைவு ஜூன் நாடாளுமன்றுக்கு

கொழும்பு,மே 25



கொரோனாத் தொற்றுப் பரவல் காலப் பகுதியில், பொதுமக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான 'கொவிட் 19 சட்ட வரைவு ' அடுத்த மாதம் முதல் வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனாத் தொற்றுப் பரவல் காலத்தில் செய்து கொள்ள அல்லது கிடைக்கப்பெறாதவற்றைப் பிற்காலத்திலேனும் பெற்றுக்கொள்வதை, இந்தச் சட்டம் உறுதிப்படுத்தும்.

தொற்றுப் பரவல் காலத்தில், ஒன்லைன் முறைப்படி மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளைச் சட்ட ரீதியாக உறுதிசெய்துகொள்வது, இந்தச் சட்ட வரைவு ஊடாக நிறைவேற்றப்படும். சட்ட வரைவைத் தயாரிப்பதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன. வெகுவிரைவில் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (எ-4)

# அரச ஊழியர்களுக்கு விரைவில் தடுப்பூசி

கொழும்பு,மே 25



அரசாங்க ஊழியர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில், அரச சேவையின் முக்கியத்துவம் அதிகளவு உணரப்பட்டுள்ளது. தொற்று அச்சம் காணப்படுகின்ற போதிலும் அரச ஊழியர்கள் தங்கள் சேவைகளைத் தொடர்கின்றனர். எனவே அரச ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# டயகம பாற்பண்ணையில் 37 பேருக்குக் கொரோனா

ஹற்றன், மே 25



அக்கரப்பத்தனை-டயகம அரச பாற்பண்ணையில் பணியாற்றும் 37 ஊழியர்களுக்கு, கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பண்ணையில் ஆறு தொற்றாளர்கள் இனங் காணப்பட்டதையடுத்து, அவர்களுடன் தொடர்பைப் பேணிய 91 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் மேலும் 37 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாற்பண்ணையில் சுமார் 700 மாடுகள் பராமரிக்கப்படுகின்றன. அதனால் அருகிலுள்ள பாற்பண்ணைகளிலிருந்து ஊழியர்களை வரவழைப்பதற்கு, பாற்பண்ணை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-4)

# மக்களைக் காப்பாற்றினாலேயே நாட்டை முன்னேற்றலாம்

## அதற்கான நடவடிக்கைகள் அவசியம் என்கிறார் அஜித்

கொழும்பு, மே 25

நாட்டு மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு மட்டுமே தற்போது முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். மனித உயிர்களைக் காப்பாற்றினால் மாத்திரமே, ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்தில் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களை விட 3 மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் இருப்பதாக இன்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அதேவேளை பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் மூலம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் அல்லது மருத்துவமனைகளில் தங்கியிருக்க நேரிடும் என்ற பயத்தாலும், தமது உறவுகளைப் பிரிந்திருக்க வேண்டும் என்ற அச்சத்தாலும் வெளியில் தெரியப்படுத்துவதில்லை. இதனால் சமூகத்தில் உள்ள தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம்.

இறப்பு எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்றவற்றால், நாம் பெரும் மனித வலு நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும்.



எனவே முடக்கம், பயணக் கட்டுப்பாடு நடைமுறைகளை உரிய முறையில், உரிய சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றிச் செயற்படுத்துவதற்கு மேலதிகமாக, அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அதிக பணத்தை முதலீடு செய்ய வேண்டும் - என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவலைகளில்

பதின்மூன்றாம் ஆண்டு | பதினொராம் ஆண்டு





**செல்வன் சண்முகநாதன் சஞ்சீவன்**
(மாணவன் - கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, திருவையாறு மகா வித்தியாலயம்)
துளிராய் 14.02.1986 விதையாய் 14.05.2008

**செல்வன் சண்முகநாதன் சுஜீவன்**
(பொறியியல்பீட மாணவன் - பேராதனைப் பல்கலைக்கழகம்
துளிராய் 17.01.1989 விதையாய் 27.05.2010

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளைகளாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்.

முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
66/2, திருவையாறு,
கிளிநொச்சி.

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 - 05 - 1960

மறைவு 18 - 05 - 2011

## அமரர் இராமநாதன் லோகநாதன்

(முன்னாள் செயலாளர் - பிரதேசசபை)

**திதி: பிரதமை [27.05.2021]**

ஆண்டுகள் பத்து அகன்றிடினும் ஆறாத துயரம்
விழிகளில் வழியும் காயாத கண்ணீர்த் துளிகளாய்
நின் நினைவுகள் நெருடுதப்பா ! மறந்தாலும் மறக்காமல்
கலைத்தாலும் கலையாத பசுமையான நினைவுகளுடன்
இனிய நினைவலைகளும் இழந்த வலியும் காலமெல்லாம்
நீங்காத நினைவுகளில்.........
ஓம் சாந்தி !

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

உங்கள் நினைவுகளைச்
சுமந்து வாழும்:
அன்பு மனைவி - லோ.ரதீஸ்வரி.

# விழி நீர் சொரிகின்றோம்




நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன், சுதுமலை புவனேஸ்வரி அம்மன் கோவில்களின் ஆதீன குருவும், சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் பீடாதிபதியுமாகிய

## சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரர் மகேஸ்வரக் குருக்கள்

நேற்று (24.05.2021) அதிகாலை அம்மனின் பாதார விந்தங்களை சென்றடைந்தார் என்ற செய்தியினை கேள்வியுற்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவலர்களும் ஊழியர்களும் நயினை வாழ் மக்களும் தங்களின் விழிநீர் சொரிந்து அஞ்சலிப்பதுடன், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் திருவடிகளை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

**அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு.**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15 . 11 . 1935

மறைவு 24 . 05 . 2021

இலங்கைத்தீவில், சக்தி பீடங்களில் ஒன்றாய்த் திகழும் பெருமைமிகு நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் குருமுதல்வரும் சுதுமலை, புவனேஸ்வரி அம்பாள் ஆதீனத்தின் பிரதம குருவுமாகிய

## சிவாகம முத்தாமணி
## சிவஸ்ரீ சம்புகேஸ்வரர் மகேஸ்வர
## சிவாசாரியார் ஐயா

அவர்கள் 24.05.2021 திங்கட்கிழமை நேற்று அதிகாலை அம்பாளின் பாதங்களில் சரண்புகுந்து விட்டார். அவர்களின் பிரிவுச் செய்தி சைவத் தமிழ் உலகிற்கும் அந்தண சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அன்னார் சிவஸ்ரீ சம்புகேஸ்வரக் குருக்கள் மீனாம்பாள் அம்மையார் தம்பதிகளின் புதல்வனாக அவதரித்தவர், சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் குருபீடாதிபதியாக இருந்த காலத்தில் திறம்பட்ட சேவை ஆற்றியவர். "கிரியாகலாப முக்தாமணி" எனச் சிறப்பிக்கப்பட்ட இவர், பல நூற்றுக்கணக்கான கும்பாபிஷேகங்களையும் சங்காபிஷேகங்களையும் மகோற்சவக் கிரியைகளையும் முதன்மைக் குருவாக இருந்து பல தேசங்களிலும் முன்னின்று நடாத்தியவர். யாழ்ப்பாணத்தின் இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவராகவும் சமூக சேவைகளில் மிகுந்த ஈடுபாடும் கொண்டவ ராகவும் திகழ்ந்த இவர், பன்மொழிப் புலமை மிக்க ஒருவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் இருந்தவர்.

ஸ்ரீ சக்கர யந்திர பூசை பற்றிய சிறப்புமிகு நூலை எழுதி வெளியிட்டவர். ஆனைப்பந்தியில் அந்தணர்களுக்கான குருகுல உருவாக்கத்திலும் அதன் தொடர்ச்சியான செயற்பாடுகளிலும் முனைப்புக் காட்டிய ஒருவர். குருகுலத்தில் அந்தண மாணவர்களுக்கு சமஸ்கிருதம் மற்றும் ஆகம வகுப்புகளுக்குச் சிறந்ததோர் வழிகாட்டியாக இருந்து சேவையாற்றியவர்.இவர் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மிகப் பெரும் பாடுபட்டவர்.ஐயா அவர்களது இழப்பு அனைவருக்கும் பேரிழப்பாகும். ஐயாவின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உறவுகளுடனும் நாமும் துயர் பகிர்வதுடன் குருக்கள் ஐயா அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரிஅம்பாள் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

**சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய
தர்மகர்த்தா சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தலை திறத்தல் திகதி பிற்போடல்

## தலைவர் பெறுகைகள் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி

தலைவர் மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழு, கிளிநொச்சி அவர்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் 05.05.2021 அன்று தினக்குரல், உதயன், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. இதன் திறத்தல் திகதியானது 24.05.2021ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தற்போதுள்ள நாட்டின் சூழ்நிலை காரணமாக 01.06.2021 முற்பகல் 10.00 மணிக்கு என பிற்போடப்பட்டுகின்றது என்பதை ஏற்புடையோருக்கு அறியத் தருகின்றோம்.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In without VAT | Grade | Contract Period | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/DGH KOC/2021/W/07 | பராமரிப்புதலகு புனரமைப்பு | 692,341.00 | C9 or 8 | 60days | 500.00 | 7000.00 | 24.07.2021 |
| 02 | NP/DGH KOC/2021/W/08 | உணவுப்பகுதி கட்டுமாணம் | 1,963,185.97 | C9 or 8 | 90days | 1000.00 | 20,000.00 | 24.07.2021 |

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி**

# மரண அறிவித்தல்

## தர்ஷியா சுஜீவன் (B.com)

(முகாமைத்துவ உதவியாளர். கணக்கியல்கிளை யாழ்.கல்வித்திணைக்களம்)



விநாயகர்வீதி நல்லூர்வடக்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுஜீவன் தர்ஷியா சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் இரத்தினசிங்கம்.சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகளும். குலநேஸ்வரன். ஜெகதீஸ்வரி தம்பதிகளின் அன்புமருகளும் சுஜீவன் அவர்களின் பாசமிகு மனைவியும். வருண். ஹரினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் துஷாந். தரணியா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2021) செவ்வாய்க்கிழமை விநாயகர்வீதி நல்லூர்வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது.

இத்தகவலை உற்றார். உறவினர்கள் நண்பர்கள் அனைருக்கும் அறியத்தருகின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொ.பே.இல.0772410108(தம்பி)**

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 . 11 . 1948



இறப்பு 15 . 06 . 2019

அமரர் திருமதி

## சறோயினிதேவி கோபாலபிள்ளை

**திதி : வைகாசித் திங்கள் பூர்வபக்க சதுர்த்தசி**

அம்மா ஆருயிர் அன்புத் தெய்வமே.
கற்பகன் தாள் சேர்ந்து ஈராண்டாகிவிட்டனவே.
எங்களை வலியெடுத்துப் பெற்றாலும்..
எங்களுக்கோர் வலியென்றால் துடிப்பது தாய்மை.
அத்தாய்மையின் உருவமேயான அம்மாவே.
உங்களை பிரிந்து தவிக்கின்றோம் அம்மா

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை அம்பாள், அரசடிபிள்ளையார், பண்டாரக்குளம் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# கிணற்றில்...

செல்லப்படும்போது உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கைதடி கிழக்குப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த கணேசராஜா தயாளினி (வயது 17) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது. வலி ஏற்பட்டதால் அவர் கிணற்றில் தவறி வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ப-159)

# ஊர்காவற்றுறை

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. கணக்காளர் - குறி.இல - 104/10**
**சம்பளத்திட்டம்** - 17605 - 198x10 - 220 x 10 - 21785
**(04/2018 சுற்று நிருபத்திற்கமைய)**

**தகைமைகள்:**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத்திட்ட கணக்கு பதவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 12வது சம்பளத்திட்ட கணக்கு பதவியாளர் அல்லது கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் இரண்டு(02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்கு பதவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி அல்லது கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் (02) ஆண்டுகால அனுபவம் அல்லது க. பொ. த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட (03) பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது (04) ஆண்டுகால அனுபவம்.

**02. அலுவலக உதவியாளர்- குறி.இல - 317/17**
**சம்பளத்திட்டம்** - 14725 - 115 x10 - 130 x 10 -17175
**(04/2018 சுற்று நிருபத்திற்கமைய)**

**தகைமைகள்:** (அ) 08ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.
02) வயதெல்லை - 18 – 45 வரை
03) விண்ணப்ப முடிவுத் திகதி - 14.06.2021

**குறிப்பு**

1. சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
3. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள், சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
4. சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்த வேண்டும்.
5. சுற்று நிருபங்களுக்கு அமைய மேலதிகக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்து நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பவேண்டும்.
7. விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி – **பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை.**

# கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்:30.12.1953**
**மறைவு:23.05.2021**



எமது பிரதேச செயலகத்தில் J/243 குரும்பசிட்டி கிழக்கில் கிராம அலுவலராக பணிபுரியும் **திரு ப.துஷாந்தன்** அவர்களின் அன்புத் தந்தையார்

## பெரியதம்பி பற்குணராசா

23.05.2021 ஆம் திகதி காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்**
**நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம் தெல்லிப்பளை.**

# 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 03 . 09 . 1981



மண்ணின் மடியில் 17 . 05 . 2000

## அமரர் சர்வசக்தி வேல் கோகுலநாதன்

**கண்ணன் கைதடி**
யாழ் / மத்திய கல்லூரி கணித பிரிவு மாணவன்
A/L 2000

**திகதி : 26.05.2021**

எங்கள் அன்புச் செல்வமே கண்ணா
எம் கற்பனைக் கோட்டை எல்லாம் ஒரு நொடியில் மறைந்ததடா
உன் அன்பொழுகும் வதனம் எங்கே உன் புன் சிரிப்பு எங்கே
உன் குறும்பு வார்த்தைகள் எங்கே நாம் எண்ணிய
- எண்ணங்கள் எங்கே
காலம் எம்மைத் தவிக்க விட்டு காலன் உன்னைக்
- கவர்ந்ததேனோ
கண்ணா உன் பிரிவால் எம் உள்ளம் துடிக்குதடா
ஆண்டுகள் எத்தனை ஆனாலும் மாறாது உன் நினைவுகள்
உன் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உன் மீளாப்பிரிவால் துயருறும்**
**அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி,**
**அக்காமார், அத்தான்மார், மாமன்மார், மாமிமார்,**
**சித்தப்பாமார், சித்திமார்**

# இளம்...

ழந்தார். இந்தப் பரிதாப சம்பவம், யாழ்ப்பாணம் நல்லூரடி கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சுஜீவன் தர்சிகா (வயது - 28) என்பவரே உயிரிழந்தார். இவர் இரண்டு பிள்ளைகளின் தாயாராவார்.

இவர், கடந்த 20 திகதி மாலைவேளை குப்பை கூட்டிவிட்டு மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். சுமார் 7 லீற்றர் மண்ணெண்ணெய் உடைய பரலை எடுத்துச் சென்று குப்பைக்கு மண்ணெண்ணெய் ஊற்றிவிட்டு தீ மூட்டியபோது, அந்த பரல் தீ பிடித்ததால், அந்தப் பெண்ணும் தீ காயங்களுக்கு ஆளானார். உடனடியாகவே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார். (து-26)

# மீன்பிடிக்கச்....

தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான ஜெயதாஸ் (வயது - 44) என்பவரே உயிரிழந்தவராவார். சடலம் வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (து-110)

# யாழ்.மருத்துவமனையில்...

லர்கள் ஆகியோரின் அலைபேசிகளைத் திருடி வந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவ்வாறு திருடப்படுகின்ற அலைபேசிகளை மிகக் குறைந்தவிலையில் கொள்வனவுசெய்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் மற்றொருவரும் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்த 7 அலைபேசிகளும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் மானிப்பாய் மற்றும் சுதுமலையைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடையவர்கள். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் தாதிய அலுவலர்களின் அலைபேசிகள் திருட்டுப் போகின்றன என்று யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், சந்தேகநபர் ஒருவர் மருத்துவமனைக்கு வெளியே மோட்டார் சைக்கிளை நேற்று நிறுத்திவிட்டு மருத்துவமனைக்குள் சென்று திருட முற்பட்ட நிலையில், அவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னர் இடம்பெற்ற திருட்டுக்கள் தொடர்பில், அங்குள்ள சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் சந்தேகநபர் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார். அதன்படி சந்தேகநபர் நேற்று மருத்துவமனைக்குள் சென்று திருட முற்பட்டபோது யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையின்போதே, திருடப்படும் அலைபேசிகளை மிகக் குறைந்த விலையில் கொள்வனவுசெய்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் மற்றைய நபர் கைதுசெய்யப்பட்டார். 7 அலைபேசிகள் மீட்கப்பட்டன. சில அலைபேசிகள் தொடர்பில் தகவல் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (து-20,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 வாரங்களுக்கு...

இதேவேளை, அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இன்று 25ஆம் திகதியும், எதிர்வரும் 31 மற்றும் ஜூன் மாதம் 4ஆம் திகதிகளிலும் வெளியே செல்லலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 3 நாள்களிலும் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய ஒரு வீட்டில் இருந்து ஒருவர் மாத்திரமே வெளியில் செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 தடுப்பு செயலணியின் விசேட கூட்டமொன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்றது. மேற்படி கூட்டத்தின் முடிவில் அரச தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அதில், அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோர் வெளியிட்ட கருத்துக்களின் தொகுப்பு வருமாறு:

* நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள முழுநேரப் பயணத் தடை மே 25ஆம் திகதி (இன்று) அதிகாலை 4 மணிக்கு தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டு, அன்றிரவு 11 மணி தொடக்கம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

* மே 26, 27, 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளிலும் பயணத் தடை முழுமையாக நடைமுறையில் இருக்கும். 31ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு பயணத் தடை தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டு, அன்றிரவு இரவு 11 மணி முதல் ஜூன் 4ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை மீண்டும் நடைமுறையில் இருக்கும்.

* ஜூன் 4 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு பயணத் தடை தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டு அன்றிரவு 11 மணி முதல் ஜூன் 6 ஆம் திகதி வரை மீண்டும் நடைமுறையில் இருக்கும். ஜூன் 7ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு பயணத் தடை தளர்த்தப்படும்.

* பயணத் தடை 3 நாள்கள் தளர்த்தப்பட்டாலும் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவுசெய்வதற்கு வீட்டிலிருந்து ஒருவர் மட்டுமே அருகிலுள்ள கடைக்குச் செல்ல முடியும். முடிந்தளவு நடந்து செல்லக்கூடிய தூரத்தில் உள்ள கடைகளுக்குச் செல்லவும். வாகனங்களில் பயணிப்பதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

* பொதுப்போக்குவரத்துக்கு அனுமதி இல்லை. வாடகை வாகனங்களிலும் பயணிக்க முடியாது.

* பயணத் தடை நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் மருந்தகங்கள் திறக்கப்பட்டிருக்கும். அத்தியாவசியப் பொருள்கள் விற்பனைசெய்யப்படும் கடைகளைத் தவிர, இதர வியாபார நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

* ஜூன் 7ஆம் திகதி வரை மதுபான சாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கும்.

* விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்படும். நடமாடும் பொருள்கள் விநியோக சேவையையும் உரிய வகையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்கலாம்.

* பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடரும். அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை எவரும் தவறாகப் பயன்படுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

* பொருள்களை வாங்க, ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் எடுக்க வேண்டிய தேவை இருந்தால், அதனைப் பெறுவதற்குச் செல்ல முடியும். அதனை அரசு தடுத்து நிறுத்தாது.

* பயணத் தடை நாள்களில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயாளர்கள் மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியும். அதற்கு எவ்வித தடையும் இல்லை.

* கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். மக்களைக் காக்கவே பயணத் தடை நடைமுறையில் உள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி வரை நாடு முழுவதும் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது என அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரம் அடைந்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்த குறைந்தது 2 வாரங்கள் முழுமையாக நாட்டை முடக்குமாறு பல்வேறு தரப்பினராலும் அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், ஏற்கனவே நடைமுறையிலுள்ள பயணத் தடை எதிர்வரும் 14 நாள்களுக்கு ஜூன் மாதம் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (த-22,44)

## வடக்கில்....

பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

பி.சி.ஆர். பரிசோதனைக்குரிய இரசாயனத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் சோதனை இடம்பெறவில்லை. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவே சோதனை நடைபெற்றுள்ளது.

**யாழ்ப்பாண மாவட்டம்**

மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் 10 பேருக்கும், காரைநகர் பிரதேச மருத்துவமனையில் 7 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 7 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 3 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்குமாக 47 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி மாவட்டம்**

மல்லாவி ஆதார மருத்துவமனையில் 4 பேருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 2 பேருக்கும், பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குமாக 7 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார் மாவட்டம்**

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு மாவட்டம்**

மாங்குளம் ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா மாவட்டம்**

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் என்று 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## யாழில்...

தப்பட்டது.

தென்மராட்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மீசாலையில் ஒருவருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 86 வயதான ஆண் ஒருவருக்குமே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மீசாலையில் உயிரிழந்தவரின் மகள், பளை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிவரும் நிலையில், அவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை தெரியவந்தது. அதனால் மீசாலையில் உள்ள அவரது வீட்டுக்கு சுகாதாரத் தரப்பினர் சென்றபோதே, தந்தையார் உயிரிழந்துவிட்டமை தெரியவந்தது.

அவரது சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை பெறப்பட்டது. அதன்போதே, அவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தமை தெரியவந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (த,ஒ,5,9,26,159)

## வடக்குக்கு...

றும் சுகாதார சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை சுகாதார முன்களப் பணியாளர்களுக்கு அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதலாவது டோஸ் கடந்த ஜனவரி மாத இறுதியில் ஏற்றப்பட்டது. அவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி தற்போது ஏற்றப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாணத்தில் முதலாவது டோஸைப் பெற்ற 500 பேர் வரையில் இரண்டாவது டோஸைப் பெறவில்லை. அவர்களில் பலர் தமக்கு தடுப்பூசி தேவையில்லை என்று தெரிவித்து வருவதால், அவர்களிடம் விளக்கம் கோருவதற்கும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகின்றது.

அஸ்ராஜெனகா தடுப்பூசி எதிர்வரும் 14ஆம் திகதியுடன் காலாவதியாவதால் அதனை திருப்பி கொழும்புக்கு அனுப்பவேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அதன் காரணமாகவே முதலாவது டோஸ் பெற்று, இரண்டாவது டோஸை இதுவரை பெறாதவர்கள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது. (ஒ.5)

## அவசர....

தொடக்கம் செயற்படும் என்று பொருளாதார மீட்பு மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழு தெரிவித்துள்ளது. இந்த அவசர அழைப்புப் பிரிவு அலரி மாளிகையில் இயங்கவுள்ளது. இந்த நடவடிக்கை, 24 மணி நேரமும் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காரணமாக தமது அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தால், அரச கட்டமைப்புடன் தொடர்புகொள்வதில் சிக்கல் இருந்தால், 1965 என்ற இலக்கத்தின் ஊடாக அலரி மாளிகையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோரின் பணிப்புரைக்கு அமைய இயங்கும் இந்த மத்திய நிலையத்துடன் தொடர்புகொண்டு தெரிவிக்க முடியும் என இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டார். (த-இ)

## பி.சி.ஆர்....

தார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பி.சி.ஆர். சோதனைக்குரிய இரசாயனப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட சோதனை நிறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சோதனை நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இரசாயனப் பொருள்களின் தட்டுப்பாடு தொடர்பில் சுகாதார அமைச்சரிடம் வினவியபோது, இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டறிந்து கொள்ளுமாறு குறிப்பிட்டார்.

'இரசாயனப்பொருள் தட்டுப்பாடு தொடர்பில் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் அங்கு பல்கலைக்கழக மருத்துவபீட சோதனை நிறுத்தப்பட்டுள்ளது. போதனா மருத்துவமனை சோதனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அநுராதபுரம் மற்றும் கொழும்புக்கு அங்கிருந்து மாதிரிகள் அனுப்பப்படுகின்றன. சோதனைக்குரிய இரசாயனப் பொருள்கள் விரைவில் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஒ.5,22)

## மருத்துவர்களின்...

சோதகர்கள் சங்கம் மற்றும் அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் என்பவை போராட்டத்தில் இன்று குதிக்கவுள்ளன. இது தொடர்பில் அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் 6 கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

தாதிய உத்தியோகத்தர்களின் குடும்பத்தினருக்கும் ஏனைய சுகாதாரத்துறையினரின் குடும்பத்தினருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றல்,

அனைத்து தாதியருக்கும் 5 ஆயிரம் ரூபா இடர் கொடுப்பனவு வழங்குதல், புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசியேற்றல், கர்ப்பிணி தாதிய உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை வழங்கல், தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு போதிய வளங்களை வழங்குதல் மற்றும் பயணத்தடைக் காலத்தில் உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இன்று காலை 8 மணி முதல் 12 மணி வரை அடையாளப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்களின் குடும்பத்தினருக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தடுப்பூசி, பணியில் உள்ளவர்களைப் புறம் ஒதுக்கி அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாக்க முற்படுவதைக் கண்டிக்கின்றோம் என்று குறிப்பிட்டார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொழியுரிமையை மீறினால் வீதிகளில் இறங்க நேரிடும்

## மனோ எச்சரிக்கை



**கொழும்பு, மே 25**

**எங்கள் பொறுமைக்கும் எல்லை உண்டு. தமிழ் மொழி என்பது எமது. அது உரிமை தொடர்ந்தும் மீறப்பட்டால், கொழும்பு வீதிகளில் இறங்கிப் பெரும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மொழியைப் புறக்கணிக்க சீனர்கள், இலங்கை அரசிடம் தான் பாடம் படித்துள்ளனர் போல் தெரிகிறது.

சட்டத்துக்கு வரைவிலக்கணம் தரும் பொறுப்பைக் கொண்டிருக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தில், மொழிச் சட்டத்தை மீறும் வகையில், தமிழுக்குப் பதில் சீன மொழியை எழுதி, நூலகத்தை சட்டமா அதிபரே திறந்து வைக்கின்றார். இப்போது, எமது எதிர்ப்புகளின் பின் அது மாற்றப்படும் எனச் சொல்லப்படுகின்றது. ஆனால், நடந்த 'சட்டமா' குளறுபடிக்குக் காரணம் யார்? சட்டமா அதிபர் திணைக்களமா? சீனத் தூதரகமா? இலங்கை அரசா?. தமிழ் மொழியைத் தவிர்ப்பதன் மூலம், சீனர்கள் நம் நாட்டின் மொழிச் சட்டத்தை மீறுகின்றனர். சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் தவிர்த்த சீன மொழி மட்டும் உள்ள பெயர் பலகைகளும் இந்த நாட்டில் உள்ளன.

நான் சீனத் தூதுவரைச் சந்தித்து இதுபற்றி விளக்கிக் கூறியுள்ளேன். சீன மொழிக்கும், தமிழ் மொழிக்கும், அதேபோல் சீன நாட்டுக்கும், தமிழ் நாட்டுக்கும் இடையில், பண்டைய வரலாற்று காலம் தொட்டு நிலவிவரும் உறவுகளைப் பற்றி அப்போது சீன தூதுவர் என்னிடம் மிகவும் சிலாகித்து கூறினார்.

சீனத் தூதரகத்தில் தமிழ் மொழி பெயர்ப்பு பிரிவை அமைத்து, இலங்கை வரும் சீன நிறுவனங்களுக்கு பெயர்ப்பலகைகளில் தமிழ் மொழியையும் எழுதும் விடயங்களில் ஒத்துழைப்பு வழங்கும்படி கூறினேன்.

சீனம், ஆங்கிலம் கொண்ட பெயர் பலகை, ஒரு வருடத்துக்கு முன்பே அகற்றப்பட்டது என்று சீனத் தூதரகம் எனக்கு அறிவித்துள்ளது. எது எப்படி இருந்தாலும், நிலைமையில் பெரிய முன்னேற்றம் கிடையாது. இந்த நிலை தொடருமானால், இதற்கு எதிராக நாம் தெருப்போராட்டம் செய்ய வேண்டி வரும். அந்தப் போராட்டத்தையும், இலங்கை, சீனம் ஆகிய இரண்டு நாட்டு அரசுகளுக்கும் எதிராகவே செய்ய வேண்டி வரும்.- என்றார். (ம-எ,4)


**மாபெரும் மலிவு விற்பனை**

**மாஸ்க் மொத்த விற்பனை**

Oneday மாஸ்க், Oneday பேபி மாஸ்க், (KN95 வெள்ளை, கருப்பு ஏனைய வர்ணங்கள்), KN95 Baby மாஸ்க் பிரின்டற், பிலேன் KN95 பிள்டர் மாஸ்க் கருப்பு, வெள்ளை, ஏனைய வர்ணங்கள் மற்றும் சனிரேசர், ஸ்ப்ரே, பெரியோர், சிறியோர்க்கான கொரோனா கண்ணாடி, நியூ பாட்டா மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்பு: 077 879 4148, 076 241 3475**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)**

**தொடர்பு: 077 288 0152, 077 235 2656**
**074 075 4204**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்.
(யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100m தூரம்)

**தொடர்பு:**
**076 221 2037**
**077 2036 402**


## மின் தாக்கி சிப்பாய் சாவு

யாழ்ப்பாணம், மே 25

குறிகட்டுவான் கடற்படை முகாமில், மின்சாரம் தாக்கி கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லலிந்த பெரேரா (வயது - 28) என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-26)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### மணல் கடத்திய...

மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், அதைச் செலுத்திச் சென்ற சாரதி, உழவு இயந்திரத்தைக் கைவிட்டுத் தப்பியோடிவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உழவு இயந்திரத்தை நிறுத்துமாறு படைத் தரப்பினர் சைகை செய்த போதும், நிறுத்தாமல் சென்றதால் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்குச்சென்ற கொடிகாமம் பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த159)

### பயங்கரவாதத்

**கின்றோம் என்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.**

**இது தொடர்பில் அந்த இயக்கம் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:**

**மனித உரிமைகள் சிவில் சமூக செயற்பாட்டாளரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளர்களில் ஒருவருமான சபாரட்ணம் சிவயோகநாதன் (சீலன்) அவர்களின் திராய்மடு மட்டக்களப்பில் அமைந்துள்ள இல்லத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற பயங்கரவாத தடுப்பு பிரிவைச் சேர்ந்த இரு புலனாய்வு அலுவலர்கள் அவர் மீது ஒன்றரை மணித்தியாலங்கள் கடுமையான விசாரணை மேற்கொண்டுள்ளனர்.**

இதன்போது, தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம்செய்ய முயற்சிக்கின்றீர்களா? சிறிலங்கா அரசால் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் தொடர்புகளை பேணுகின்றீர்களா? என்ற கோணத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் அவருடன் தொடர்புடைய ஊடகவியலாளர்கள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. வெளிப்படையாக ஜனநாயக வெளியில் செயற்படும் ஒருவருக்கு வழமைபோலவே பயங்கரவாத முத்திரை குத்துவதற்கு அரசு மேற்கொள்ளப்படும் முயற்சியாகவும், மனித உரிமைகள் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தி அவர்களின் செயற்பாடுகளை முடக்கி தமது சர்வாதிகார அராஜக ஜனநாயக விரோத ஆட்சியை முன்னெடுக்க அரசு நடத்தும் கபட நாடகமாகவுமே பார்க்க வேண்டியுள்ளது.

#### உளவியல் அச்சுறுத்தல்

மேற்குறிப்பிடப்படும் விசாரணைகள் அனைத்தும் விசாரணைகள் எனும் பெயரில் மனித உரிமைகள் சிவில் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்துவதுடன் அவர்கள் தொடர்ந்து செயற்படாதவாறு உளவியல் ரீதியான அச்சுறுத்தலையும் நெருக்கடிகளையும் கொடுப்பது ஆகும். குறிப்பாக தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியான கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலத்தில் ஊடகவியலாளர்கள் உட்பட சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது வெளியில் செயற்படும் இளைஞர்களை சிறிலங்கா ஆயுதப் படைகளால் கொல்லப்பட்ட தமது உறவுகளுக்கு நினைவேந்தலை நடத்தியமை, முகநூலில் புகைப்படங்களை வெளியிட்டமை மற்றும் முகப்புத்தகத்தில் அஞ்சலி செலுத்தியமை போன்ற காரணங்களை முன்வைத்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளனர். இந்த நடவடிக்கையானது தமிழர் தாயகத்திலுள்ள அனைத்து தமிழ் மனித உரிமைகள் சிவில் செயற்பாட்டாளர்களுக்குமான மறைமுக மிரட்டலையும் அச்சுறுத்தலையும் நெருக்கடிகளையும் கொடுத்து அவர்களின் செயற்பாடுகளை ஒட்டுமொத்தமாக முடக்குவதா கும்.

இந்த அரசின் கடந்தகால மற்றும் தற்கால செயற்பாடுகளும் முன்னெடுப்புக்களும் இவற்றுக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸின் தாக்கம் மிகவேகமாக பரவி பல உயிர்களை பலியெடுத்து வரும் அவலம் நிறைந்த சூழலில் முழு மக்களினமுமே தம் வாழ்வைக் குறித்து கலங்கி நிற்கும் இவ்வேளையில், அரசு தனது அராஜகத்தையும் ஒடுக்குமுறையையும் எவ்வித மாற்றமோ மனச்சாட்சியோ இன்றி தொடர்கின்றது.

எனவே இந்த அரசு நாட்டிலுள்ள, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் செயற்பட்டுவரும் தமிழ் மனித உரிமை செயற்பாட்டாளர்களை இலக்குவைத்து நடத்திவரும் அச்சுறுத்தல் அடக்குமுறை செயற்பாடுகளை உற்றுநோக்குகின்றபோது மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு எவ்வித பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லாத நிலையும் இதன் அடுத்த கட்டம் என்னவாக அமையும் என்பதும் அச்சம் நிறைந்ததாக உள்ளது. குறிப்பாக பங்குனி (மார்ச்) மாதத்தில் ஐ.நா சபையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஊடகவியலாளர் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கான ஜனநாயக வெளிகள் மேலும் சுருங்கி வருவதுடன் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருவதையும் இங்கு கோடிட்டு காட்ட விரும்புகின்றோம்.

எனவே அரசின் இத்தகைய அராஜக செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதுடன், இத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தி மனித உரிமைகள் சிவில் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளுக்கு உத்தரவாதமளிக்குமாறு அனைத்துலக மனித உரிமைகள் சிவில் செயற்பாடுகள் நீதிக்குமான அமையங்கள், மற்றும் ஐ.நா. மன்றத்தையும் மிக அவசரமாகவும் அவசியத்துடனும் கோரி நிற்கின்றோம்.

அத்துடன் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான சாட்சிய சேகரிப்பில் இந்த விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி சேர்த்துக் கொள்வதுடன், ஆறு மாதங்கள் அறிக்கையிடலில் தமிழ் பேசும் மக்கள் மீதான பயங்கரவாத தடைச்சட்ட பிரயோகம் தொடர்பான விடயங்களை சேர்த்துக்கொள்ளுமாறு ஐ.நா. ஆணையாளரிடம் வேண்டி நிற்கின்றோம். - என்றுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25. 05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.